மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 2 | 15 - 12 - 53 | இதழ் 16

★

வன்சிறை வாழ்வு தந்தார்

ஆச்சாரியார்!

வெற்றி மலர்த்தொடை தந்தனர்

மக்கள்!

★

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

சிறைசென்று மீண்ட தலைவர்கள்

அறிஞர் அண்ணா

மதியழகன், சம்பத், நெடுஞ்செழியன், நடராசன்

ஆகியவர்களுக்கு

30 - 11 - 1953-ல் சென்னைக் கடற்கரையில் நடந்த
வரவேற்புக் கூட்டத்தில் அளித்த

வாழ்த்திதழ்

விழிப்புற்ற திராவிடத்தின் முன்னணி வீரர்களே! வீறுகொண்ட இனத்தின் சீர்சால் தலைவர்களே! தாயகத்தின் மானங்காக்க, தமிழரின் உரிமையைக்காக்க எழுந்த பெரும் போராட்டத்தில் முதற்பலியாக, முன் செல்லும் படையாக, களம் புகுந்து வாகை சூடிய உங்களை வரவேற்கிறோம்! நீங்கள் ஆற்றிய செயல்கண்டு பாராட்டுகிறோம்! நீங்கள் தந்த வெற்றி கண்டு மகிழ்கிறோம்!

அறிவொளி பரப்பிடும் அண்ணல்—அடிமைத்தளையை அகற்றிடும் வீரர்—கருத்துக்கள் பொலிவுறும் எழுத்தின் மன்னர்—கண்ணியம் மறவாத அரசியல் தலைவர்—நலிவுற்ற மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்—இன்பத் திராவிடத்தின் இணையற்ற தூதர்—எங்கள் குலத்தலைவர்,

—அறிஞர் அண்ணா!

எழிலார் திராவிடத்தின் இளஞ்செல்வம்—ஏற்றம்பெற மாணவருலகின் ஆக்கந் தரும் தலைவன்—மக்கள் உரிமையை மதியாத ஆட்சிக்குப் பதில் தரவந்த,

—மதியழகன்!

ஆர்த்தெழுந்த சென்னை அறப்போரின் தலைவன்—அயராது போராடும் ஆர்வத்தில் மிக்கோன்—தடை பலவரினும், படைபல தடுக்கினும் தயங்காத தடந்தோளான்,

—சம்பத்!

அழியாத் தமிழ்ப் பண்பின் உறைவிடம்—ஆற்றல் மிகு வீரத்தின் உருவம்—இன்பத் திராவிடத்தின் இலட்சிய கீதத்தை நாடெங்கும் பரப்பிடும் நல்லாசிரியன்,

—நெடுஞ்செழியன்!

எமது சென்னை நகர் தந்த செம்மல்—செயலாற்றும் வீரர்களில் சிறந்து விளங்குவோன்—தொல்லையிலுழலும் தொழிலாளர் துயர் தீர்க்கப்பாடுபடும் தோன்றல்,

—நடராசன்!

உங்கள் அனைவரையும் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்! சூழ்ந்திடும் ஆரியமாயை, சூறையாடும் வடநாட்டு முதலாளித்துவம், அடிமைப்படுத்தும் டில்லி ஆதிபத்தியம், அல்லல் கொடுக்கும் ஆச்சாரியார் ஆட்சி இவைகளை எதிர்த்து, உங்கள் தலைமையில் அணிவகுத்த படைவரிசையில் பணிபுரியும் வாய்ப்பு எமக்கும் கிடைத்தது குறித்து மகிழ்கிறோம்! பெறற்கரிய பேறு இதுவெனப் பெருமைப்படுகிறோம்!

"சென்று வருகிறோம் செயலாற்றுங்கள்" என நீங்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து ஆற்றி, எங்கள் அளவில் கிடைத்த பலனை, பெற்ற வெற்றியை, உங்கள்முன் வைக்கிறோம்.

வருக எம் தலைவர்களே! வளர்க நுமது செயல்கள்!
வாழ்க! வாழ்க!! வளமார் திராவிடம்!!!

கே. எஸ். கண்ணபிரான்
செயலாளர்.

திராவிட முன்னேற்றக் கழகம்
சென்னை மாவட்டம்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

15-12-53 செவ்வாய்க்கிழமை

அபூர்வ ஆராய்ச்சியாளர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்துள்ள வளர்ச்சி, அதன் குறிக்கோள்களுக்கு நாட்டு மக்களிடையே கிடைத்து வருகிற பேராதரவு, அது நடத்திய மும்முனைப் போராட்டங்களினால் மக்கள் மனதில் உண்டாகியுள்ள விடுதலை எழுச்சி தென்னாட்டு அரசியலில் புதிய கட்டத்தை—மாற்றுக்கட்சியினருக்குப் புதிய குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது. அதிலும் சிறைசென்று மீண்ட தலைவர்களுக்குக் கிடைத்திடும் வரவேற்பையும், அவர்களுடைய கூட்டங்களுக்கு ஆர்வத்துடன் திரண்டிடும் மக்கள் அணிவகுப்பையும் காணும்பொழுது எதிர்க்கட்சியினருக்குப் பொறாமையும், பொச்சரிப்பும், பின் கோபமும், ஆத்திரமும், கடைசியாக கலக்கமும், திகிலும் உண்டாகியிருக்கின்றன. அதனால்தான் அவர்களுடைய பேச்சிலே தடுமாற்றம் காணப்படுகிறது, எழுத்திலே "ஐயோ!" என்ற வேதனை மிகுந்து கிடக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராகப் புதிய முறையில் பிரசாரத்தைத் துவக்கியுள்ளனர்.

எதிர்ப்பு முன்னணியில்

இந்த எதிர்ப்பு முன்னணியில் காங்கிரஸ்காரர்களும், கம்யூனிஸ்ட்களும், கனம்பொருந்திய மந்திரிகளும், கல்கி போன்ற பத்திரிக்கைகளும், இரண்டறக் கலந்துள்ளன. ஒரே மூச்சில், வெவ்வேறு முனைகளிலிருந்து தாக்க ஆரம்பித்துள்ளனர், இந்த தேசிய, சர்வதேசிய கண்ணோட்டத்தில், யதார்த்த நிலைகளை அலசிப் பார்த்திடும் அரசியல் வாதிகள் அனைவரும்.

திராவிட நாடு பற்றிய பிரச்சினை, இன்று நேற்றல்ல, பத்துப் பதினைந்து ஆண்டுகாலமாக நாட்டிலே எடுத்துக் கூறப்பட்டுவந்திருக்கிறது, பல்லாயிரக்கணக்கான கூட்டங்களில் பேசப்பட்டுவிட்டது. எழுதப்பட்ட ஏடுகள், காட்டப்பட்ட வரலாற்று ஆதாரங்கள், எண்ணத் தொலையாதன. ஆனால் மாற்றுக்கட்சியினர், இவ்வாறு ஒரு இயக்கம், திராவிடர் என்ற இன உணர்ச்சி, வடநாடு—தென்னாடு என்ற வேற்றுமை வளர்ந்துவருவதை ஒத்துக்கொள்ளவே மறுத்தனர். தங்களால் பேசுவதற்கு, எழுதுவதற்குக்கூட தகுதியற்றது என்று இறுமாப்பில் இருந்தனர். விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசிலர் எழுப்புகிற கலவரக் கூச்சல் என்று பேசாமலிருந்தனர்.

ஆனால் அவ்வாறு அலட்சியப்படுத்தியவர்களுக்குப் பதில் தருவதுபோல, விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் அல்ல, கடற்கரையில் கூடினாலும் இடம் போதவில்லை என்று கூறுமளவுக்கு மக்களின் ஆதரவைப்பெற்று திராவிட முன்னேற்றக் கழகம் விளங்குகிறது. மக்கள் மன்றத்தில் கழகக் கொள்கைகள் பெற்றுவரும் பேராதரவு மமதையாளரின் கண்ணையும், கருத்தையும் நிலைகுலையச் செய்கிறது. பலர் கோபத்தால் கொட்டியளக்கின்றனர் வார்த்தைகளை, சிலர் பொறாமையால் பொங்கி வழிகின்றனர் வெளிக்காட்டமுடியாமல்.

நமது கழகத்தினரை, "வகுப்புவாதிகள்" "தேசத் துரோகிகள்" என்றெல்லாம் தமது போக்கில் குற்றஞ்சாட்டி வந்தவர்கள் இப்பொழுது புதிய முறையில் தமது எதிர்ப்பைத் துவக்கியுள்ளனர். நம்மைப்பற்றி அவதூறு கூறுவதைக் கொஞ்சம் குறைத்து, நாம் பரப்பிவரும் கொள்கைகளின்மீது குற்றங்குறைகள் கண்டுபிடிக்க முற்பட்டுள்ளனர். வடநாடு—தென்னாடு என்று பேசுவோர் வகுப்புவாதிகள் என்பது போய், வடநாடு—தென்னாடு என்ற கொள்கை கூடாது என்று பேசத்தலைப்பட்டுள்ளனர். கூடாது என்பது மட்டுமல்ல, அத்தகைய பேதமே கிடையாது என்று கூறுகின்றனர். இவ்வளவு காலமாக நாம் காட்டிய ஆதாரங்களை அவர்கள் மறுத்துரைத்ததாகத் தெரியவில்லை. தங்களுக்குத் தாங்களே ஆதாரம் என்று பேசத்தலைப்பட்டுள்ளனர்.

நாம் காட்டிய வரலாற்று ஆதாரங்களுக்குத்

தக்க மறுப்புகளும் சமாதானங்களும் கூற இயலாத வகையில், அவர்கள் இப்பொழுது வாதிடும் முறை இரண்டு வகைகளில் அடங்கும்.

வரலாறு—ஒரு கற்பனையாம்!

ஒன்று "ஆரியர்—திராவிடர் என்ற வேறுபாடு சில வெள்ளைக்காரச் சரித்திர ஆசிரியர்களின் கற்பனையாகும். அதை ஆதாரமாகக் கொண்டு இவர்கள் வேற்றுமைகளை உண்டாக்குகின்றனர்" இந்தவகையில் ஆச்சாரியாரும் அவருடன் ஒருசிலரும் பேசுகின்றனர்.

இரண்டாவது "ஆரியர் பன்னெடுங் காலத்துக்கு முன்பே தென்னாட்டில் வந்துவிட்டனர், ஆயினும் அந்தக்காலத்திலிருந்து இன்றுவரை ஆரியர்—திராவிடர் என்ற இன வேற்றுமையை யாரும் அறிந்திருக்கவில்லை" என்பது. இந்த வகையில் சில பத்திரிக்கைகள் எழுதியுள்ளன.

இந்த இரண்டு வாதங்களும் முன்னுக்குப்பின் முரணானவை. முதற் கூற்றுப்படி, ஆரியர்—திராவிடர் என்ற வேற்றுமை கிடையாது, எல்லாம் வெறும் கற்பனை என்றால், இரண்டாவது கூற்றில் இருக்கிறபடி "ஆரியர்கள் வந்து பன்னெடுங்காலம் ஆகிவிட்டது, வேறுபாடின்றி இருக்கின்றனர்" என்று கூறுதல் முடியாது. இருந்தபோதிலும் இரண்டையும் தனித்தனியாகக் கவனிக்கலாம்.

"ஆரியர்—திராவிடர் வேற்றுமை வெள்ளைக்காரச் சரித்திர ஆசிரியர்களின் கற்பனை" என்று கூறுகின்றவர்கள், வெள்ளைக்காரர்கள் எழுதினார்கள் என்ற ஒரே காரணத்தினால், ஸ்மித், ஆலன், ரகோசின், வில்லியம்ஸ், ஹாவெல், ராலின்சன், ஜான்ஸ்டேன், கால்டுவெல், கிரையர்சன், டிக்சன் ரிஸ்லி, மார்ஷல், ஹிராஸ் போன்ற வரலாற்றாசிரியர்கள் எழுதிய ஆராய்ச்சிகளையெல்லாம் ஒரேயடியாக, ஒதுக்கிவிடத் தலைப்படுகின்றனர். ஆசிரியர் ஒரு வெள்ளைக்காரன் என்று அந்த புத்தகங்களையெல்லாம், தூக்கி எறிந்துவிடுவதைவிட, அந்த நூல்களிலுள்ள குற்றங்குறைகள், தவறான கருத்துக்கள், பின்னால் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளால் மாறுபட்டவை என ஏதாவது எடுத்துக் காட்டியிருந்தால் நன்றாயிருந்திருக்கும். அவர்கள் தந்த சான்றுகளை, ஆச்சாரியாரோ, அவருடைய அருமைச் சீடர்களோ மறுக்கவில்லை, மறுக்க முடியவில்லை. ஆனால் ஆசிரியர் யார் என்பதை மட்டும் பார்த்துவிட்டுத் தள்ளிவிட முயற்சிக்கின்றனர். நூலாசிரியரை விட்டு, "எங்கே தவறு?" என்று பக்கத்தைப் புரட்டிக் காட்டுங்கள்! ஆச்சாரியாரோ, அவருடைய "அபூர்வ" ஆராய்ச்சிக் குழுவினரோ தயாரா? என்று நாம் கேட்கிறோம்.

அய்யங்கார்—ஆச்சாரியார்கள் தரும் வரலாறு!

வெள்ளைக்கார ஆசிரியர்கள் எழுதியதை யாவது விட்டுவிடுவோம், "அவர்கள் அந்நிய நாட்டினர், இந்த நாட்டைப் பிரித்துவைக்க அவ்வாறு கற்பனை செய்தனர்" என்று கூறுகிறார்கள். நம் நாட்டு வரலாற்றாசிரியர்கள் எழுதி வைத்திருக்கின்றனரே ஆரியர்—திராவிடர் பற்றிய இனங்களை! அவைகளை எப்படி இந்தக் குல்லுகபட்டரும் கல்கிக் குழுவினரும் ஒதுக்கித்தள்ளமுடியும்! இந்திய வரலாறுகளை எழுதிய பி. டி. சீனிவாச அய்யங்கார், சீ. எஸ். சீனிவாசச்சாரியார், கிருஷ்ணசாமி அய்யங்கார், எம். கே. சுந்தர வரதாச்சாரியார், மஜூம்தார், ரோமேஷ் சந்தர் டட், ஹோஷி சந்தர் டட், ராத குமுத் முகர்ஜி, ஏ. சி. தாஸ், என். என். கோஷ் போன்றவர்கள் வெள்ளைக்காரர்களல்ல; திராவிட—ஆரிய வேற்றுமைகளை உண்டாக்க அவர்கள் விரும்பியிருக்க முடியாது. அவர்களே ஆரியர்—திராவிடர் வேற்றுமையைப் பக்கம் பக்கமாக எழுதியுள்ளனரே! அதையும் காட்ட வேண்டுமா?

"இந்திய சரித்திரம்" என்ற புத்தகத்தில், பி. டி. சீனிவாச அய்யங்கார், எழுதுகிறார் "ஆரியம் பரவுவதற்குமுன் இந்தியாவில் நான்கு வருண பேதங்கள் கிடையாது. மண விஷயத்தில் ஆரியரின் யக்ஞ முறை கிடையாது. வட இந்தியாவில் பேசப்பட்ட மொழிகள் கொஞ்சங் கொஞ்சமாக சமஸ்கிருதத்தில் கடன் வாங்கியபோதிலும், தென்னிந்தியா சமஸ்கிருதத்துக்கு அடிமைப்படவில்லை. ஆரம்பகாலத்தில் மக்கள் பேசிவந்த மொழியின் நாகரிக உருவந்தான் தமிழ்."

"நெருப்பின்மூலம் தேவனைத் தொழுதலை ஒப்புக்கொண்டவர்கள் ஆரியர்கள், இதை ஒப்புக்கொள்ளாதவர்கள் தஸ்யூக்கள் அல்லது திராவிடர்கள் என்றும் ஆனார்கள்." பி. டி. சீனிவாச அய்யங்கார், ஒரு வெள்ளைக்காரரல்ல,

"வகுப்புவாத"க் கட்சிக்காரருமல்ல, ஒரு அப்பழுக்கற்ற அய்யங்கார் சிகாமணி. அவர் எழுதியது வெறும் வெறுப்பையூட்டும் கற்பனையா?

ஆரியர்—திராவிடர் என்ற வேற்றுமையே கிடையாது, ஆரியர் இங்கே வந்தபோதிலும், வேற்றுமையின்றி இரண்டறக் கலந்துவிட்டனர் என்று இப்பொழுது கூறுகின்றனரே, வெள்ளைக்கார சரித்திர ஆசிரியர்கள் கூடாதென்போர்! ஆனால் அவர்களுக்குத் தக்க பதில் சொல்லும்வகையில், தமது "இந்திய சரித்திரம்" என்ற புத்தகத்தில் 12-13 பக்கங்களில் எம். கே. சுந்தரவரதாச்சாரியார் தெளிவாகக் கூறுகிறார். "ஆரிய. திராவிடர்களுடைய வெவ்வேறான தோற்றத்திற்கும் நடையுடை பாஷை முதலியவற்றின் பேதங்களுக்கும், நாட்டின் இயற்கை யமைப்பும், வட இந்தியாவிலிருந்தவர்களுக்கேற்பட்ட கலப்பும், தென்னிந்தியாவிலிருந்தவர்களுக்கு அவ்வாறான கலப்பின்மையும், சிறந்த போக்குவரவுக்கான சாதனங்களும், ஒற்றுமைக்கு வேண்டிய மற்ற அநுகூலங்களும் இல்லாததனால் இவர்கள் ஒருவரோடொருவர் கலந்து உறவாடக்கூடாமையுமே முக்கிய காரணங்களாகும்.

அன்றியும் வடநாட்டின்மீது படையெடுத்தும், சௌகரியத்தை நாடியும் வந்த கிரேக்க, யவனர்களும், சாகர், பாரசீகர், முதலானவர்களும், ஆரியர்களான உத்தரதேசத்தவர்களும் கலந்து கொஞ்சங் கொஞ்சமாகத் தாங்களும் மாறி, அவர்களையும் மாற்றிவிட்டாற்போல, தென்னிந்தியாவில் யாதொன்றும் நடைபெறவில்லை. விந்திய, சாத்புரா மலைகளையும், நருமதையாற்றையும் கடந்து தென்னிந்தியாவுக்கு வருவது மிகக் கஷ்டமாயிருந்தது மல்லாமல், தென்னிந்தியத் திராவிடர்களும் அவர்களை வரவொட்டாமல் தடுத்துவிட்டனர். ஆகையினால்தான் வட இந்தியாவிலிருந்தவர்களுக்கும், தென்னிந்தியாவிலிருந்தவர்களுக்கும் வித்தியாசங்கள் பெருகிவிட்டன."

பி. டி. சீனிவாச அய்யங்காரும், எம். கே. சுந்தர வரதாச்சாரியாரும் வெள்ளைக்காரர்கஎல்ல, மறந்துங்கூட திராவிட ரியக்கத்தினரோடு சேர்த்தெண்ணிவிடமுடியாது. ஆனால் அவர்கள் தெள்ளத் தெளிய எழுதியுள்ளனர் ஆரியர்—திராவிடர் வரலாறுகளைப்பற்றி, நாகரிகங்களைப்பற்றி, பழக்க வழக்கங்கள், பாஷைவிதங்களைப்பற்றி, வட இந்தியா எப்படி ஆரியக் கலாசாரத்துடனும், தென்னிந்தியா எப்படி திராவிடக் கலாசாரத்துடனும் வாழ்கின்றன என்பதையும் காட்டுகின்றனர். ஆரியர்—திராவிடர் பிரிந்து வாழ்வதற்கான காரணங்களையும், வடநாட்டு ஆரியரை வரவொட்டாமல் தென்னாட்டுத் திராவிடர்கள் தடுத்துவந்தனர் என்றும் எழுதுகின்றனர். இதைப்போன்ற ஆதாரங்கள், இந்திய ஆசிரியர்கள், அதிலும் அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார் போன்றவர்கள் எழுதிய வரலாற்றுப் புத்தகங்களிலிருந்தே எடுத்துக்காட்டமுடியும்.

வேற்றுமை பாராட்டாதது ஏன்?

அடுத்தபடி, நீண்டகாலமாக ஆரியர்—திராவிடர் என்ற வேற்றுமையுணர்ச்சியின்றித் தமிழ் மக்கள் வாழ்ந்துவந்தனர், இப்போது தான் தவறான கற்பனைகளை ஆதாரமாகக் கொண்டு இல்லாத வேற்றுமைகளைப் புதிதாக உண்டாக்குகின்றனர் என்ற குற்றச்சாட்டை கவனிப்போம். சங்ககாலத்தில் பார்ப்பனர்கள் வேதமோதி, யாகங்கள் நடத்தினர் என்பதற்கு புறநானூறிலிருந்து சில பாடல்களை மேற்கோள் காட்டி, ஆரியர்—திராவிடர், வடநாடு—தென்னாடு என்ற வேற்றுமையை அந்தக்காலத்தில் யாரும் பாராட்டவில்லை என்று கல்கியார் முடிவுகட்டுகின்றார், மிக அவசரத்துடன்.

அந்தப் பாட்டுகளில் அவ்வாறு வேதமோதியும், யாகங்கள் வளர்த்தும், ஆரியர்கள் இருந்தனர் என்பதும், அவர்கள்மீது வெறுப்பு கொள்ளவில்லை என்பதும் உண்மை. அவ்வாறு ஆரியர்மீது வெறுப்புணர்ச்சி தோன்றாததற்குக் காரணம், அந்த அவசியம் அன்று ஏற்படாமலிருந்தது. தமிழகம் அப்பொழுது சீரும் சிறப்பும் பெற்று, எல்லாவகையிலும் உயர்ந்து விளங்கியது, நாடோடிகளாக வந்த ஆரியர்களைத் துன்புறுத்தாது பாதுகாக்கவே அரசர்கள் பெருந்தன்மையால் முற்பட்டனர். பலமுள்ளவன் பலமற்றவனைப் பார்த்து வெறுப்பு கொள்வதில்லை, உரிமையுடன் வாழ்பவனுக்கு எதையும் வரவேற்கும் மனப்பாங்குதான் இருக்கும்.

உதாரணமாக 1942-ல் "வெள்ளையனே வெளியேறு" என்ற குரல் எழுந்தபோதிலும், 16, 17 நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்தபோது, மொகலாய அரசர்கள் அவர்

களை வெறுத்து ஒதுக்கவில்லை. அக்பரும், ஜஹாங்கீரும் வெள்ளையர்களை வரவேற்று, அவர்களுக்கு வியாபார வசதிகளும், இடமும் தந்தனர் என்றே படிக்கிறோம். அதை வைத்துக்கொண்டு, வியாபாரியாகவந்த வெள்ளையன் அரசாங்கம் அமைத்து எதேச்சாதிகாரியான பின்கூட, "அந்த நாளில் வேற்றுமை பாராட்டாதிருந்தனர்; எனவே வெள்ளையன் என்று வேற்றுமையுணர்ச்சி காட்டாதீர்கள்!" என்று 1942-ல் கூறினால் யாராவது ஏற்றுக்கொண்டிருப்பார்களா? காரணம் அன்று வெள்ளையன் என்றால் யாரோ வியாபாரி என்று கருதப்பட்டான், யாரும் கவலைகொள்ளவில்லை. பின்னால் நிலைமை மாறி, அவன் அதிகாரியானதும் தான் எதிர்ப்புணர்ச்சி கிளம்பியது,

அதுபோல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாடோடியாக வந்த ஆரியர்கள் தமது பழக்க வழக்கங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும், வேதங்கள் ஓதவும், யாகங்கள் வளர்க்கவும், ஆதரவும், பாதுகாப்பும் தரப்பட்டனர். ஆனால் இன்று சமூகத்தில் உயர்ந்த நிலையடைந்து, மற்றவர்களை ஆட்டிப்படைக்கும் வலியடைந்துள்ளனர். எனவேதான் அன்று காணப்படாத எதிர்ப்புணர்ச்சி இன்று காணப்படுகிறது.

வடவாரியர்கள்.

சங்க காலத்தில்கூட வடநாட்டிலிருந்த ஆரியர்களுக்கும் தமிழகத்திலிருந்தவர்களுக்கும் இடையறாத போர் இருந்ததென்பதற்குச் சான்றுகள் பலவுள்ளன.

வடநாட்டின்மீது தமிழ் மன்னர்கள் பகைமை பாராட்டி படையெடுத்துச் சென்றதற்குப் பல வரலாறுகள் இருக்கின்றன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற மன்னன் இமயமலை வரை சென்றான் என்பதும், கரிகால் வளவன் வடநாட்டின்மீது படையெடுத்து அவந்தி வேந்தன், மகத மன்னன் முதலியவர்களை வென்று இமயம்வரை சென்று திரும்பினான் என்பதும், செங்குட்டுவன் ஆரிய அரசர்களை வென்று அவர்கள் தலைமீது கல்லேற்றிவந்தானென்பதும், திரண்டுவந்த ஆரியப்படைகளைத் தாக்கி வெற்றிபெற்றமையால் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என ஒரு பாண்டிய மன்னன் இருந்தானென்பதும் தெரிகிறது.

இன்னும் வடநாட்டிலிருந்த ஆரியர்களுக்கும், தமிழகத்தினருக்கும் நெடுகப் பகைமையிருந்தமையை, புறநானூறையும், சங்க நூல்களையும் நன்கு புரட்டினால் காணலாம்.

"வடவாரியர் படைகடந்து"
"பேரிசை மரபின் ஆரியர் வணக்கி"

எனப் பதிற்றுப்பத்து இரண்டாம் பத்திலும்,

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசை
தோன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்"

என அகநானூற்றிலும், வடவாரியர்களுக்கும் தமிழர்களுக்கும் நடந்த சண்டைகள் குறிக்கப்படுகின்றன. இன்னும் ஆரியப்படைகள் தமிழகத்துக்குள் நுழைந்தால், தமிழர்கள் எதிர்த்துப் போராடியிருக்கின்றனர் என்பது,

"ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்"

எனவும்,

"மாரி யம்பின் மழைத்தோற் சோழர்
வில்லீண்டு குறும்பின் வல்லத்துள் புறமிளை
ஆரியர் படையின் உடைக"

என்றும் பாடப்பட்டுள்ள அடிகளால், முள்ளூர், வல்லம் என்ற இடங்களில், தமிழகத்துக்குள் நுழைந்த ஆரியப்படைகளைத் தமிழ் அரசர்கள் எதிர்த்து ஓடச்செய்தனர் என்று தெரிகிறது.

இவைகளிலிருந்து சங்ககாலத்திலும் ஆரியருக்கும் தமிழருக்கும், வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் பகைமையுணர்ச்சி இருந்ததென்பது தெரியவரும், ஆனால் அன்று தமிழர்கள் உரிமையுடன், எவருக்கும் அடிமைப்படாது, பல் வளங்களும் பெற்றுவாழ்ந்தனர்; இன்று ஆரியத்துக்கும், வடநாட்டுக்கும் அடிமைப்பட்டு அவதியுறுகின்றனர். எனவேதான் அன்றிருந்ததைவிட அதிக அளவில் பகைமையும், வெறுப்புணர்ச்சியும் வளர்ந்திருக்கின்றன.

எவற்றை விரட்டுகிறோம்?

யார் யாரை விரட்டுவது எனக் கல்கியார் கொதிப்புடன் கேட்கிறார். எவரையும்—மனிதனென்று தன்னை நினைத்துக்கொண்டு, மற்றவர்களையும் மனிதர்களென்று மதிக்கும் எவரை

யும் நாம் வெறுக்கவில்லை. வெளியேற்றவேண்டிய அவசியத்திலில்லை.

அரசியலில் நாட்டை அடிமைப்படுத்தும் டில்லி ஆதிபத்தியத்தை இங்கிருந்து விரட்டிவிட நாம் பாடுபடுகிறோம்.

பொருளாதாரத்தில் நாட்டின் செல்வத்தை சுரண்டிப் பிழைக்கும் முதலாளித்துவத்தை இங்கிருந்து விரட்டிவிட நாம் உழைக்கிறோம்.

சமூகத்தை நான்கு வருணங்களாகவும் நாலாயிரம் வகுப்புகளாகவும் பிரித்துக் கொடுமைப் படுத்தும் வர்ணாச்சிரமத் திட்டத்தை நாட்டை விட்டு விரட்ட நாம் போராடுகிறோம்.

வஞ்சகத்தை, உழைக்காது வாழும் வகையை விரட்ட நாம் பாடுபடுகிறோம்.

மூட நம்பிக்கைகளை, நாட்டை மூடிக்கிடக்கும் அறியாமையிருளை, நாட்டைவிட்டு விரட்டிட விரும்புகிறோம்.

பஞ்சத்தை, பட்டினியை, வறுமையை, வாட்டத்தை விரட்டியடிக்க முயலுகிறோம்

சர்வாதிகாரப் போக்கை, எதேச்சாதிகார தன்மையை, கொடுங்கோல் ஆட்சியை, கல் நெஞ்சினர் விளையாட்டை நாட்டினின்றும் விரட்டிட போராடுகிறோம்.

யார் இவற்றை விரட்டுவது என கேள்விக் கேட்டுவிட நம்மால் முடியாது; டில்லிக்குக் காவடி தூக்கியோ, துப்பாக்கிக் குண்டுகளை வீசியபின்போ, அடக்குமுறையைத் தூவியோ, தண்டனைப் பட்டியலைத் தந்தோ, அவர்கள் கேட்பதுபோல் நாம் கேட்கவில்லை. நமது திராவிடத்தின் இழி நிலையை, ஏழ்மையை, அதன் மீது போடப்பட்டிருக்கும் அநீதிகளை, கொடுமைகளை, நம்மையன்றி வேறு யார் விரட்டுவது? என்ற கேள்வியுடனதான் நாம் புறப்பட்டோம்.

இன்பத் திராவிடம்! அதுவே நமது இலட்சியமாகும். அதனை நோக்கி நாம் செல்லும் பொழுது, நம்மை நோக்கி சிலர் இழித்தும், பழித்தும், வெறுத்தும், உறுத்தும் கூச்சலிட்டபடிதான் இருப்பார்கள். கூச்சல்கள் வரும், ஆனால் பயணம் தடைப்படாது.

உடனே உதவி தாருங்கள்!

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

தூத்துக்குடிச் சதிவழக்கில்

96 கழகத் தோழர்கள்
16 பயங்கரக் குற்றச்சாட்டுகள்

தூக்குத்தண்டனை, ஆயுள்தண்டனை, பத்து ஆண்டு, ஐந்து ஆண்டு எனத் தண்டனைகளை அள்ளி வீசவல்ல சட்டப் பிரிவுகள்

மிக நெருக்கடியான கட்டம். ஆச்சாரியாரோ நாம் படும் அவதிகண்டு கோரச் சிரிப்பு சிரிக்கிறார்

ஆச்சாரியாரின் ஆணவத்திற்குப் பதில்தர கழகத்தோழர்களை விடுவிக்க

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு உதவுங்கள்

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

அ. பொன்னம்பலனார், 24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை.

கல்வித்திட்டமும் :: "நிபுணர்" குழுவும்

ஆச்சாரியார் கொண்டுவந்த அபூர்வ கல்வித் திட்டம், அவரது ஆட்சிமுறையின் அலங்கோலத்தை வெளிப்படுத்தியதுடன், அவரது ஆட்சிபீடத்தையே அசைத்துவிட்டது. "ஐம்பதாண்டுகளாக நான் யோசித்து வைத்திருந்த அதிசயத்திட்டம்" "இந்தத் திட்டம் புதிய வரலாற்றை உண்டாக்கிவிடும்" என்றெல்லாம் ஆணவக்குரலில் ஆரம்பித்த ஆச்சாரியார், திட்டம் அமுலுக்கு வந்த உடனே, நாட்டில் நாலா பக்கங்களிலிருந்தும்—கல்வி நிபுணர்கள், பள்ளி ஆசிரியர்கள், அரசியல் வாதிகள், பெற்றோர்கள் இவர்களில் பெரும் பாலோரிடமிருந்து வந்த எதிர்ப்பு கண்டு, அவருடைய குரலில் தணிவும், பேச்சுகளில் தடுமாற்றமும் உண்டாயின. இந்தத் தீய கல்வித் திட்டத்தால்—வர்ணாச்சிரமத்தைப் பாதுகாக்க ஆச்சாரியார் ஆரம்பித்த சூதும் வஞ்சமும் நிறைந்த திட்டத்தால், நாட்டுப் பெருங்குடி மக்களின் எதிர்காலமும், அறிவு வளர்ச்சியும் அடியோடு நாசமாக்கப்படும் என்பதைக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தீமை பயக்கும் இந்தத் திட்டத்தைக் கைவிடுமாறு அரசாங்கத்தை எச்சரித்தது. ஆனால் ஆச்சாரியாரோ அந்த எச்சரிப்பை அலட்சியப்படுத்தி, தான் எடுத்த சர்வாதிகாரப் போக்கிலேயே இருந்தார். அதிகார போதையல்லவா, மிக மதிமயக்கந்தருவதாயிற்றே !

மக்களின் எதிர்ப்பையும், பெற்றோர்களின் அதிருப்தியையும், நிபுணர்களின் கண்டிப்பையும், நேர்மையான அரசியல்வாதிகளின் கண்டனத்தையும் ஆச்சாரியார் ஏற்றுக்கொள்ளாதது கண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் அறப்போர் துவங்குவதெனத் திட்டமிட்டது. அதற்கு ஆன்றோரின் ஆசியும், சான்றோரின் சாட்சியமும் கிடைத்தன. சட்டசபைத் துவங்கிய நாளில், சென்னை நகரில் அறப்போரும் துவங்கியது, காணாத கண்ணினரான ஆச்சாரியாரின் கண்ணெதிரே எதிர்ப்பைக் காட்ட, கேளாத காதினர் காதிலும் எதிர்ப்புக் குரல்களை விழச்செய்ய.

திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கிய அறப்போரின் விளைவாக, எதிர்ப்புக் கிளர்ச்சி முற்றி, சட்டசபைக்குள்ளும் பலமாகத் தலை தூக்கியது. பலத்த விவாதத்திற்குப்பின், திட்டத்தை நிறுத்திவைத்து, ஒரு நிபுணர் குழுவை நியமித்து புதிய கல்வித் திட்டத்தை ஆராயும் படிச் சட்டசபை கட்டளையிட்டது. ஆச்சாரியார் மந்திரிசபை முதல் தடவையாக—அதுவும் முக்கிய பிரச்சினையொன்றில் தோல்வியடைந்தது.

சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி, புதிய கல்வித்திட்டம் உடனடியாக நிறுத்திவைக்கப்பட்டு, அதை ஆராய ஒரு குழுவை நியமிக்கப்படவேண்டும் என்பதாகும்.

சட்டசபை நிறைவேற்றிய தீர்மானத்தை—இட்ட கட்டளையை ஆச்சாரியார் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்; முதலாவதாக முக்கிய பிரச்சினையில் ஆச்சாரியார் அடைந்த தோல்விக்கு பதவியை விட்டு விலகியிருக்க வேண்டும், இரண்டாவதாக ஜனநாயக முறைப்படி சட்டசபை தீர்மானத்தை அமுலாக்கியிருக்கவேண்டும். ஆனால் ஜனநாயகப் பண்பறியாத ஆச்சாரியார், சட்டசபைத் தீர்மானத்தை அலட்சியப்படுத்திவிட்டார்.

சட்டசபைத் தீர்மானப்படி புதிய கல்வித் திட்டத்தை நிறுத்திவைக்கவில்லை. ஆனால் இரண்டாவது பகுதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த நிபுணர் குழுவை அமைப்பதை மட்டும் செய்ய முன்வந்தார், அதுவும் தன்னிச்சைப்படி.

கல்வித் திட்டத்தை ஆராயவந்த குழுவுக்கு நிபுணர்களைப் பொறுக்குவதில் சட்டசபையின் ஆலோசனையையோ, அல்லது சம்மதத்தையோ அவர் பெறவில்லை அன்றியும் எதிர்க்கட்சியினரையோ, புதிய கல்வித் திட்டத்திலுள்ள குறைபாடுகளைப்பற்றி விளக்கிய கல்வி நிபுணர்களையோ, அந்த ஆராய்ச்சிக் கமிட்டியில் ஆச்சாரியார் சேர்த்துக்கொள்ளவில்லை. எவரையும்

கலந்துகொள்ளாமல், தாம் கொண்டுவந்த கல்வித்திட்டத்தைப் பற்றி ஆராய, அவராகவே ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார். கமிட்டியில் இடம்பெற இந்த நாட்டுக் கல்விமுறை, பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், வாழ்க்கை வசதிகள் இவைகளைப் பற்றி முன்பின் அறிமுகமில்லாத சிலரை ஆச்சாரியார் இறக்குமதி செய்தார். சென்னையைச் சேர்ந்த ஒருவர் மட்டும் அதில் பணியாற்றினார். அவரும் ஆச்சாரியார் கல்வித்திட்டத்துக்கு ஆரம்பத்திலிருந்தே, மிக வெளிப்படையாக புகழ் பாடிக்கொண்டு திரிந்த கல்வியிலாகா டைரக்டராகும், அரசாங்க உத்தியோகத்திலிருப்பவராதலால், அரசாங்க திட்டத்தை எதிர்த்துப் பேசிடும் ஆற்றலின்றி இருந்தவர். ஆக, ஆச்சாரியார் அந்த ஆராய்ச்சி கமிட்டியை அமைத்திடும்பொழுதே தமது திட்டத்துக்கு ததாஸ்து கூறும் விதத்தில்தான்தான் அதைப் பொறுக்கியெடுத்துக்கொண்டார்.

ஆச்சாரியார் "இஷ்டப்படி" அமைக்கப்பட்ட குழு சென்னையில் மூன்று தடவைகள் கூடியது; புதிய கல்வித்திட்டம் எப்படி நடைமுறையிலிருக்கிறது என்பதைக் கண்டறிய, அவர்கள் ஒவ்வொரு மாவட்டந்தோறும் சுற்றிப் பார்த்து குறைகளை நேரில் பார்த்தறிய முயன்றார்களா? என்றால் கிடையாது. அன்றியும் புதிய கல்வித்திட்டத்துக்கு எதிராக மற்ற அரசியல் கட்சியினரும், குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் தந்த காரணங்களையும், வாதங்களையும் அவர்கள் ஆராய்ந்து விடைகாண முயன்றதாகத் தெரியவில்லை. புதிய கல்வித்திட்டத்திலுள்ள குற்றங்குறைகளை நீக்கவேண்டும் என்ற உண்மையான நோக்கம் அந்தக் குழுவுக்கு இருந்திருந்தால், அறிஞர் அண்ணா, டாக்டர் லட்சுமணசாமி முதலியார், ஓமந்தூர் ராமசாமியார். டாக்டர் சுப்பராயன் போன்ற கட்சி வேறுபாடின்றி, புதிய கல்வித்திட்டத்தின் குறைகளை எடுத்துச் சொன்னவர்களைச் சந்தித்து, விளக்கம் பெற்றிருக்கவேண்டும். ஆனால் அந்த "நிபுணர் குழு" அவ்வாறு எந்தவித "அசம்பாவிதங்களையும்" செய்யவில்லை. அவர்களைச் சந்திக்காவிட்டாலும் அவர்கள் சொன்ன வாதங்களையாவது ஆராய்ந்திருக்கலாம், அதையும் செய்யவில்லை; புதிய கல்வித்திட்டம் நடைமுறையில் நடப்பதையாவது நேரில் கண்டறிந்திருக்கலாம், இவைகளில் ஒன்றையும் செய்யாமல், ஆச்சாரியாரின் அழைப்பையும், அவர் தந்த திட்டத்தையும் வைத்துக்கொண்டு, கடைசியாக ஒரு அறிவிப்பைத் தந்துவிட்டுப்போயினர்.

புதிய கல்வித்திட்டத்துக்கு ஒவ்வொருவரும் தம்மளவில் நின்று அபிப்பிராயம் கூறுவது போல், அந்தக் குழுவினரும் தனிப்பட்ட அபிப்பிராயங்களைத் தந்துள்ளனர். எதிர்பாளர் காட்டிய குறைகளுக்குச் சமாதானம் தரப்படவில்லை; கல்வி நிபுணர்களும், ஆசிரியர் தலைவர்களும் காட்டிய கண்டனத்திற்கு மதிப்போ, மறுப்போ தரப்படவில்லை. சென்னை ஆங்கிலத் தினசரியொன்று குறிப்பிட்டதைப் போல, "அரசாங்கம் எந்தவகையாக விரும்பியிருக்குமோ அந்தவகையில், அதிலும் வெகு விரைவாக, ஒரு ரிபோர்ட்டை அந்தக் குழு சமர்ப்பித்திருப்பது கண்டு ஆச்சரியப் படுவதற்கில்லை."

அறிஞர் அண்ணா குறிப்பிட்டதுபோல, வர்ணாச்சிரமக் கல்வித்திட்டத்தை எதிர்த்து நாம் ஆரம்பித்திருக்கும் போராட்டம் மிகக் குறுகிய காலத்துக்குள் முடிந்துவிடக்கூடியதல்ல. அது ஒரு நீண்டகாலப் போராட்டமாகும். எனவே போராட்டம் [illegible]ர்ந்து செல்லும் நாம் வெற்றியடையும்வரை, மக்களுரிமை மீட்கப்படும்வரை.

தோழர்களுக்கு

★ 1-1-54 இதழிலிருந்து 'மன்றம்' 32 பக்கங்களுடன் வெளிவருகிறது.

★ இரா. நெடுஞ்செழியன் மொழிபெயர்த்து எழுதும் இங்கர்சாலின் கட்டுரைகள்.

★ இரா. செழியனின் புதிய தொடர்கதை.

மற்றும் அரசியல், வரலாறு, விஞ்ஞானம், இலக்கியம், சிறுகதை முதலிய பகுதிகளுடன் மிளிரும்.

இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0— 5—0

வெற்றிக்கு அவர்தந்த விலை

டில்லி சென்ற ஆச்சாரியார் வெற்றிப் புன்னகையுடன் திரும்பியிருக்கிறார். அவருக்கு எதிராகப் பெரும்பான்மையான காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் அனுப்பிய மனு காரியக்கமிட்டியால் நிராகரிக்கப் பட்டது, முதன் மந்திரியாக ஆச்சாரியாரே தொடர்ந்து இருக்கட்டும் என்ற உத்தரவைப் பெற்று ஆச்சாரியார் திரும்பியிருக்கிறார். நேரு பண்டிதரிடம் ஆச்சாரியாருக்குள்ள தனிப்பட்ட செல்வாக்கிற்குமுன், காமராஜர் திரட்டிச் சென்ற படைபலம் தோற்றுவிட்டது. காங்கிரசில் செல்வாக்குடையோர் பெரும்பான்மையினராகக் காட்டிய எதிர்ப்பு, செய்த தீர்மானம், அனுப்பிய மனு எல்லாம் நிராகரிக்கப்பட்டுவிட்டன. முதன் மந்திரி பதவியுடனேயே ஆச்சாரியார் திரும்பியுள்ளார்.

ஆச்சாரியார் வெற்றிபெற்றார் என்பது உண்மை. ஆனால் அந்த வெற்றியைப் பெற ஆச்சாரியார் கொடுத்த விலை மிக அதிகமானது. காங்கிரஸ் வரலாற்றில் ஆச்சாரியார் மகாத்மா காந்தியாருடன் ஒன்றாக இருந்த பழம் தலைவர்களில் ஒருவர். பண்டித நேருகூட அவருக்குப் பிற்பட்டவர்தான். காமராஜரோ, ஆச்சாரியாருடைய அரசியல் காலத்துடன் ஒப்பிட்டால் ஒரு சிறு பிள்ளைபோல. அந்தப் பழம் பெரும் அரசியல்வாதியை, அவருடைய கட்சிக்குள்ளேயேயிருக்கும் பெரும்பான்மையினர் "வெளியே போ!" என விரட்டுகின்றனர். அவரோ மேலிடத்து சிபாரிசை பெற்றுப் போகாமல் உட்கார்ந்திருக்கிறார். மிக வெட்கக்கேடான நிலை!

தமது அரசியல் கவுரவத்தை ஈடாகவைத்து தான் ஆச்சாரியாரால் வெற்றிபெற முடிந்தது! தமது மானத்தை விலையாகக் கொடுத்துதான் அவர் மந்திரிப் பதவியில் தொடர்ந்து இருக்கிறார். இல்லாவிட்டால் அவர் ஏன் முதன் மந்திரிப் பதவியை அவ்வளவு கஷ்டப்பட்டு வைத்துக் கொள்ள முயலவேண்டும்? சட்டசபைக் கட்சிக்குள், தான் கூடாது என்ற கட்சி வலுவடைகிறது என்று தெரிவதற்கு முன்பே ஆச்சாரியார் "தூ!" என பதவியை உதறித்தள்ளிவிட்டு வெளியேறியிருக்கவேண்டும், தமது அரசியல் கவுரவத்தையும், மானத்தையும் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்றால். ஆனால் ஆச்சாரியாரோ மந்திரிப் பீடத்தில் அட்டைபோல ஒட்டிக்கொண்டிருக்கிறார்.

ஆனாலும், அப்படியென்ன ஆச்சாரியார் பதவிகளை வகித்தறியாதவரா? முன்பே சென்னையில் முதன்மந்திரியாக யிருந்திருக்கிறார். பின் வங்காளத்தில் கவர்னராக இருந்தார், மத்திய சர்க்காரில் மந்திரியாக இருந்திருக்கிறார். இந்திய அரசாங்க அமைப்பிலேயே மிக உயர்ந்த இடமாயிருந்த கவர்னர் ஜெனரல் பதவியிலும் அமர்ந்திருக்கிறார். இருந்தாலும் இன்னும் அவருக்குப் பதவிப்பித்தம் விடவில்லை. சென்னை முதன்மந்திரி பதவிக்காக காமராஜருடன் மல்லுக்கு நிற்கிறார், டில்லிக்குக் காவடி தூக்குகிறார். மீசை நரைத்தாலும், ஆசை விடவில்லை என்பதுபோல, அரசியலில் இவ்வளவு நீண்டநாள் செல்வாக்குக்குப் பின்னும், அரசாங்கத்தில் பெரும்பதவிகள் வகித்த பின்பும். ஆசை அவரைவிட்டுப் போகவில்லை.

கவர்னர் பிரகாசா தயவினால் அவருக்கு சட்டசபையில் இடம் கிடைத்தது, இன்று அலகாபாத் பண்டிதரின் ஆசீர்வாதத்தால் மந்திரி பதவியில் இருக்கமுடிகிறது! சே, சே! வெளியில் சொல்லிக்கொள்ளவே, அவர் நிலையிலுள்ளோர் வெட்கப்படவேண்டிய செய்தியாகும்! ஆச்சாரியாரோ இந்த அவல நிலைக்குக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

தமது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள, ஆச்சாரியார் தமது அரசியல் கவுரவத்தை மட்டுமல்ல, தென்னாட்டின் அரசியல் கவுரவத்தையே வடநாட்டின்முன் வைத்துவிட்டார். ஆச்சாரியாருக்கும் காமராஜருக்கும் ஏற்பட்ட பூசல் சென்னையிலேயே தீர்க்கப்படவில்லை. டில்லியில்தான் தீர்ப்பு கூறப்பட்டது. இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் ஆதிக்கமனைத்தும் டில்லியில் குவிந்திருப்பதுமட்டுமல்ல, இந்தியாவிலுள்ள காங்கிரஸ் போன்ற அரசியல் கட்சிகளின் ஆதிக்க பீடமும் வடநாட்டினர் கையில்தான் இருக்கிறது. தென்னாட்டின் அரசியல் நிலை வடநாட்டினரால்தான் நிர்ணயிக்கப்படுகிறது.

வாழ்க்கை வரலாறு

ஜியார்டனோ புருனோ

(முன் இதழ் தொடர்ச்சி)

“நான் உம்மைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும், அல்லவா? நீர் ஒரு கத்தோலிக்கர் அல்லர் என்பதை நான் அறிந்துகொள்ளவேண்டும் அல்லவா? நீர் புனிதச் சர்ச்சின் மேம்பாட்டை உதறித் தள்ளிவிட்டீர்! நீர் ஒரு மத எதிரியாகவோ, ஒரு லூதரனாகவோ அல்லது ஒரு கால்வினிஸ்டாகவோ, அல்லது ஒரு ஹியூஜ்னட் பைத்தியக்காரனாகவோ இருக்கிறீர்!” என்று அரசன் சினம்பொங்கிய குரலில் கேட்டான்.

“நான் ஒரு கத்தோலிக்கனுமல்ல; அல்லது லூதரைச் சேர்ந்தவனுமல்ல; அல்லது கால்வினைச் சார்ந்தவனுமல்ல; அல்லது எந்த ஒரு ஹியூஜ்னட் பிராட்டஸ்டெண்டுகளைச் சேர்ந்தவனுமல்ல. நான் ஒரு தத்துவக்கலைஞன்; அறிவியல் வாதி; இப்பொழுதுள்ள மதப்பிரிவுகள் எதனோடும் என்னுடைய எண்ணங்களும், கொள்கைகளும் ஒத்துவருவதில்லை” என்று புருனோ தெளிவுபடக் கூறினார்.

பிறகு சிறிதுநேரம் அமைதி நிலவியது. புருனோவின் வீரம்பேசும் முகத்தையும், உண்மைபேசும் கண்களையும் கண்ட அரசன் மனம் இளகிவிட்டான். தன்னுடைய கைகளை நீட்டி புருனோவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, அவரைப் பரிவோடு பார்த்தான்.

“இளம் வீரரே! நீர் உம்முடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பினால், மதத்திற்கு மாறுபட்ட கருத்தை வெளியிடாமல், அமைதியாக வாய்திறவாமல் இரும். புனித சர்ச், மத நம்பிக்கையற்றவனின் வாதங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. கடவுள் வழிபாட்டில் கலந்துகொள்வதான சுமையோடுகூடிய, பேராசிரியர் பதவியைவிடக், கடுமையானவைகள்தாம் மற்றப்பதவிகளெல்லாம். பரிசுத்த மேரி உமக்கு நல்ல உள்ளத்தை அளிக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். ஆனால், சோர்போன் மடாலயத்திலுள்ள கற்றறிஞரெல்லாம், உமது பக்தியற்ற போக்கை அறிந்துவிட்டால், என்னுடைய ஆதரவுகூட உமக்குப் பாதுகாப்பு அளிக்கமுடியாமற் போய்விடும்” என்று அரசன் மனவருத்தத்தோடு கூறினான்.

அரசன் போனவுடன், ஜியார்டனோ தலையைக் கவிழ்த்துக்கொண்டு, ஆழ்ந்த சிந்தனையில் அப்படியே உட்கார்ந்துவிட்டார். அவர் முகத்திலே வாட்டம் ஏற்பட்டது; கவலை நெற்றியிலே பல கோடுகளைக் கிழித்தது. மறுபடியும் ஓடிப்போக வேண்டியவனாகவும், நாடோடியாகத் திரியவேண்டியவனாகவும் மாறத்தான் வேண்டுமோ என்று எண்ணினார். கிருத்தவ மதத்தின் மூட நம்பிக்கையிலிருந்து விடுபட்டவனுக்கு, வாழ்வும், அமைதியும் ஒருபொழுதும் கிடையாதா, என்று சிந்தனை செய்தார்.

1583-ஆம் ஆண்டில் புருனோ வடக்குநோக்கி இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். அப்பொழுது இங்கிலாந்தில் எலிசபெத் அரசியாக வீற்றிருந்தாள். எலிசபெத்தின் அரசவையில் பிரெஞ்சு நாட்டின் தூதுவனாக இருந்த மைக்கேல் டி காஸ்டெல்னு என்பானுக்கு, பிரெஞ்சு மன்னன் ஹென்றியிடமிருந்து, அறிமுகக்கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொண்டு, புருனோ இங்கிலாந்து சென்றார்.

இங்கிலாந்தின் அரசவைக்களத்தில் இருந்தவர்களிலே சர் பிலிப் சிட்னி என்பார் புருனோவுக்கு நெருங்கிய நண்பரானார். சிட்னியின் ஆண்மைத்திறத்தையும், அன்புபாராட்டும் திறத்தையும் புருனோ பாராட்டிப் போற்றினார். எலிசபெத் ராணி பிராட்டெஸ்டண்டு மதத்தைச் சேர்ந்தவளாக இருந்தபோதிலும், அவளுடைய அறிவு ஆற்றல், திறமை ஆகியவற்றைப் புருனோ பலபடப் பாராட்டிப் புகழ்ந்தார். பின்னால் மத விசாரணைக் குழுவின் வேட்டை நாய்கள் புருனோவின்மீது குற்றஞ் சுமத்தும்

போது, அவர் எலிசபெத் அரசியாரைப் பாராட்டியதையும் குற்றங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டனர்.

எலிசபெத் அரசியாரைப்பற்றிச் சொல்லும்போது, “ அவள் காலத்திலே அவளுக்கு ஒப்பான கண்ணியமுடையவன் எவனுமில்லை; அவளைப்போலறிந்த வழக்கறிஞனும் இல்லை; அவளைப் போன்ற அரசியலறிஞனும் இல்லை! ...உலகம் முழுவதும் ஒளிபரப்பவந்த செஞ்ஞாயிறு போன்று அவள் உயர்ந்தாள். பதவியிலும் சரி பெருமையிலும் சரி, அவள், அந்தக் காலத்தில் வாழ்ந்த உலக அரசர்களில், எவருக்கும் தாழ்ந்தவளல்லள். அறிவுடைமை, எதைப் பற்றியும் முடிவு எடுக்கும் தன்மை, ஆளுகையிலே காட்டும் திறமை ஆகியவற்றில் அவளுக்கு அருகில் வரக்கூடிய அருகதைபெற்ற அரசியார் வேறு யாரும் இல்லை ” என்று புகழ்மாலை சூட்டினர். எலிசபெத் போப்பின் ஆதிக்கத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்க இசையாத காரணத்தால், அவளைப் போப்பாண்டவர் மதவிலக்குச் செய்து, மத எதிரி என்ற குற்றத்திற்கு உள்ளாக்கியிருந்தார்.

மதத்துறையைத் தவிர்த்து, மற்ற துறைகளில், இங்கிலாந்தும் இத்தாலியும் உடன்பிறந்தாரைப்போல் காணப்பட்டன. இத்தாலியின் மொழி, கலை, இலக்கியம் ஆகியவற்றை அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவல், ஆங்கில மக்களிடத்தில் மிகுந்து காணப்பட்டது. இத்தாலிய இலக்கியங்களும், வரலாறுகளும் ஷேக்ஸ்பியரைப் பெரும் அளவுக்குக் கவர்ந்தன. மில்டன் பலமுறை அந்நாட்டைச் சுற்றிப் பார்த்து, மறுமலர்ச்சி வாழ்வுகண்டு மகிழ்ந்தான். இங்கிலாந்து அரசவையில் இத்தாலிய மணம் கமழ்ந்ததால், அது புரூனோவின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து நின்றது. புரூனோ வாழ்வதற்கேற்ற இடமாகவே அது காணப்பட்டது. புரூனோ தம்முடைய தீவிரமான கருத்துக்களை வெளியிடாமல், போப்பின் ஆதிக்கத்தைக் கண்டிக்கிற அளவுக்கும், பிராடெஸ்டண்டைப்போல காலந்தள்ளுகிற அளவுக்கும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முற்பட்டிருப்பாரேயானால், அவருடைய வாழ்வு மிக அமைதியாகவும், அருமையாகவும் கழிந்துபோயிருந்திருக்கும். ஆனால் புரூனோவால் தம்முடைய கருத்துக்களை வெளியிடாமல் எப்படி இருக்கமுடியும்?

1583-ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கலைவிழா கொண்டாடப்பட்டது. பற்பல நாட்டினரும் வந்திருந்தனர். சிவப்பு நாடா கட்டியிருந்த கற்றறிஞர்கள் பலர் கலந்துகொண்டனர். நான்கோடும் இலக்கியச் சொற்போர்கள் நடைபெற்றன. தத்துவக் கருத்துக்களை ஆதரித்தும், எதிர்த்தும் வாக்குவாதங்களும், சொற்போர்களும் நிகழ்ந்தன. சொற்போர்களில் நாக்குகள் வாள்களாகவும், சொற்கள் சம்மட்டிகளாகவும் பயன்படுத்தப்பட்டன. இறுதிநாளன்று, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களோடு, சொற்போர் புரியும் ஆற்றல் பெற்றோர் யாரேனும் உண்டோ என்று அறைகூவப்பட்டது. சொற்போர்புரிய துடித்துக்கொண்டிருந்த புரூனோ, அந்த அறைகூவலைக் கேட்டு அகமகிழ்ந்து, மன்றத்தில் ஏறி நின்றார். வீரம், அழகு, உணர்ச்சி, ஊக்கம் எல்லாஞ் சேர்ந்த பொலிவுடைய தோற்றத்தோடு நின்றார். இத்தாலி, சுவிட்ஜர்லாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் எப்படிப்பட்ட உணர்ச்சியோடு வாக்குவாதம் புரிந்தாரோ, அதே உணர்ச்சியால் உந்தப்பட்டுக் கருத்துக்களை நீர் அருவிபோலக் கொட்ட ஆரம்பித்தார். உலகம் நகருகிறதா? இந்த ஒன்றைத்தவிர வேறு பல உலகங்களும் உண்டா? என்பன போன்ற கேள்விகள் எழுந்தன. “ உலகம் அசையாதது; அண்டம் முடிவான ஒன்று; அது நகரக்கூடியது ” என்று, அரிஸ்டாடில், தாலமி ஆகியோரின் கருத்துக்களை ஒட்டி, பல்கலைக்கழகத்தார் வாதிட்டார்கள். “ உலகம் சுழல்கிறது; அண்டம் முடிவடைந்த ஒன்று அல்ல; உலகைப் போன்று வேறுசில கோள்கள் (கிரகங்கள்) உண்டு ” என்று, பிலோலாஸ், கோபர்னிகஸ் ஆகியோரின் முடிவுகளை ஒட்டி, புரூனோ வாதிட்டு நின்றார். வாதம் மிகப்பெரிய அளவுக்கு வளர்ந்தது. புரூனோ காரணகாரியங்கள் காட்டித் தம் கருத்தைத் தெளிவுபடப் பொறுமையுடன் விளக்கினார். புரூனோவின் கருத்துக்களுக்கு நேருக்குநேர் விடையிறுக்கமாட்டாத மாற்றார்கள், அவரைக் கேலி கிண்டல் செய்வதில் இறங்கினார்கள். புரூனோ அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், உறுதியுடன் நின்று வாதிட்டார்.

புரூனோ தன்னந்தனியாகத்தான் நின்றார். ஆனால் அவர் பக்கம் உண்மையிருந்ததால் எதிர்த்து வாதிட்டோர் அனைவரும் வாயடைத்துப்போனார்கள். மதத்தைப் புறமுதுகிடச்

செய்து, அறிவியலுக்கு வெற்றிவாங்கித்தர அரும்பாடுபட்டார்; இறுதியில் வெற்றிக்களிப்போடு காட்சியளித்தார்.

புரூனோ அனுமதி பெற்றுக்கொண்டு, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில், சில சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். பாரிஸ் நகரத்தில் கூடியதுபோலவே, மக்கள் பெருந்திரளாக அவரது சொற்பொழிவைக் கேட்கக் கூடினர். அவர் தெருவில் நடந்துபோய்க்கொண்டிருந்தால், மக்கள் "அதோ, நாத்திகன்!" என்று சுட்டிக்காட்டி, முணுமுணுப்பார்கள். அறிவியலுக்குப் பைபிள் ஆதாரமாகாது என்று கூறிய புரூனோவைப், பாதிரியார்கள் கண்டால், அவர் மீது சுடுசொற்களை வீசிப் பாய்ந்துவிழுவார்கள். "மத எதிரியும், கடவுள் எதிரியுமான அவன் பேச்சை நீங்கள் கேட்டால், நீங்கள் படுநரகத்திற்குப் போய்ச் சேருவீர்கள், அவனை அண்டாதீர்கள்" என்று இளைஞர்களைப் பார்த்து எச்சரிக்கை செய்வார்கள்.

இறுதியில் இங்கிலாந்திலும், அந்த தத்துவக்கலை அறிஞர் தங்கியிருக்கமுடியாத நிலை ஏற்பட்டது. அவருடைய சிறந்த நண்பர்களான மைக்கேல் டி காஸ்டெல்னோவும், பிலிப் சிட்னியும் வெளிநாடுகளுக்குப் போய்விடும் வாய்ப்பு நேர்ந்தது. அவர்கள் போனவுடன், புரூனோவை ஆதரிப்பதற்கு யாரொருவரும் இல்லாமற் போய்விட்டார்கள். எதிர்ப்புகள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்தன; அச்சுறுத்தல்கள் அடிக்கடி மிரட்டியவண்ணமிருந்தன. 1586-ம் ஆண்டு புரூனோ இங்கிலாந்தை விட்டுப், பிரான்ஸுக்கு ஓடினார். அவர் பாரிஸ் போய்ச் சேர்ந்த மூன்று நாட்களில், விட்சன் டைட் என்ற இடத்தில் ஞாயிறு, உலகம், அண்டம்பற்றி அரிஸ்டாடில் கூறிய கருத்துக்களின்மீது விவாதம் ஏற்பட்டது. இந்த விவாதத்தின் விளைவாக மதவெறியர்கள் புரூனோவை எதிர்த்துக் கிளப்பினார்கள்; அவர் பாரிஸ் நகரத்திலேயே வாழமுடியாத நிலைக்கு எதிர்ப்பு திரண்டெழுந்தது. அரசன் ஹென்றி புரூனோவுக்கு ஆதரவுதர அஞ்சினான்; சோர்போன் மடாலயம் அவரைத் தண்டிக்கப்போகிறோம் என்று அச்சுறுத்தல்களைக் கிளப்பிக்கொண்டிருந்தது. புரூனோ விரைவில் வேறிடம் பார்த்துக்கொண்டு ஓடவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. பல இடங்களைப்பற்றிச் சிந்தித்துக், கடைசியாக, ஹெஸ்ஸே பகுதிக்கு ஓடிவிடலாம் என்று முடிவுசெய்து, அந்த நாடு போய்ச் சேர்ந்தார். அங்குள்ள மார்பர்க் பல்கலைக் கழகத்தில் தமக்கு வேலையும், வாழ்க்கை வசதியும் கிடைக்கும் என்று நம்பி அங்கே சென்றார். முதலில் அங்கிருந்த சூழ்நிலைகள் அவருக்கு உறுதியளிப்பன போலக் காணப்பட்டன. 1586-ம் ஆண்டு ஜூலைத் திங்களில், அந்தப் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் என்ற பட்டம் வழங்கி, அவரைப் பெருமைப்படுத்திற்று. அந்தப் பல்கலைக் கழகத்திலேயே, தத்துவக்கலை பற்றிப் பயிற்சியளிக்கத், தமக்கு உரிமை அனுமதிக்கவேண்டும், என்று பல்கலைக் கழகத்தின் தலைமை நிர்வாகியைக் கேட்டுக் கொண்டார்.

தமக்கு விரைவில் அனுமதி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில், சிறிதுகாலம் மகிழ்ச்சியோடு காலந்தள்ளிவந்தார். அந்தப் பல்கலைக் கழகத்தில் தம் விருப்பப்படி கல்வி பயிற்றுவிக்கலாம் என்றும், தாம் கண்ட உண்மைகளைச் சொல்லுவதற்கு அதுவே ஏற்ற இடமாக இருக்கும் என்றும், தம்மைத் தடுப்பார் யாரும் அங்கே இருக்கமாட்டார்கள் என்றும் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தார்.

பட்டு நாடாவால் முடிபோடப்பட்ட தாள் சுருள் ஒன்றை ஏந்திக்கொண்டு, அவர் அனுப்பிவைத்தத் தூதுவன் மீண்டும் வந்து சேர்ந்தான். புரூனோ மகிழ்ச்சியோடும், கவலையற்ற முறையிலும் அதனை வாங்கி, புன்சிரிப்பு உதட்டிலே தவழ, அந்தப் பட்டு நாடாவை அறுத்துச், சுருளை விரித்துப் படித்தார். படிக்கும்போது அவருடைய ஒளிவீசும்முகம், மங்கிற்று; அவருடைய கண்கள் இருட்டின, பல்கலைக்கழகத் தலைமை நிர்வாகி அனுமதி மறுத்து எழுதிவிட்டார்; புரூனோ கல்வி கற்பிக்கக்கூடாது என்பதற்குப் பல ஆழ்ந்த 'காரணங்கள்' இருந்ததால், அனுமதிதர மறுக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. புரூனோ ஆத்திரப்பட்டு, உடனே எழுந்து, விறுவிறு என்று, தலைமை நிர்வாகியின் இடம்நோக்கிச் சென்றார். தம் கையிலிருந்த தாள் சுருளை, தலைமை நிர்வாகியின் மேஜையின்மீது தூக்கி எறிந்து, "இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் காரணங்கள் தாம் யாவை?" என்று ஆத்திரத்தோடு கேட்டார். மேலும் படபடப்புடன் சொல்லும்போது, "இந்தப் பல்கலைக்கழகத்தின் டாக்டர் என்று நீர்தான் என்னை ஆக்கினீர்; இந்த

டாக்டருக்குக் கல்வி கற்பிக்க உரிமையில்லை என்று நீரே மறுக்கிறீர்! இந்த வெறும் பட்டத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது? ஏன் என்னை இப்படி நடத்துகிறீர்கள்?" என்று கேட்டார்.

புரூனோவின் கூற்றுக்களை அசையாமல் செவிமடுத்த தலைமை நிர்வாகியான பையோர்ரே நிஜிடியஸ் என்பார், புரூனோவைப் பார்த்து, "டாக்டர் புரூனோ! உம்முடைய கொள்கைகள் எமக்குப் பொருந்திவருவதாக இல்லை. அப்படிப்பட்ட கருத்துக்கள் ஆசிரியரிடத்தில் இருப்பது நல்லதல்லவாகலால், அவரை விட்டு இளைஞர்களுக்குக் கல்வி கற்பிக்கச் செய்ய எமக்கு விருப்பமில்லை" என்று அமைதியாகக் கூறினார்.

"பொருந்தவில்லை?....நல்லதல்ல?.... ஆனால் அவைகள் உண்மையாக இருந்தால்!" என்று புரூனோ உரக்கக் கத்திக் கேட்டார்.

"அருமை அன்பரே! உண்மை, கடவுளின் தராசால்தான் அளந்து பார்க்கப்படவேண்டும். உலகம் சுழல்கிறது என்ற உம்முடைய கூற்று வேத நூலின்முன் காற்றாய்ப் பறந்து போகிறதே!"

"வேத நூல் அவ்வளவு அறியாமை நிரம்பியது என்பதை அது காட்டுகிறது" என்று, புரூனோ, தலைமை நிர்வாகியின் முகம் எப்படிக் கறுக்கிறது என்பதைப்பற்றிக் கவலைப்படாமல், மறுமொழி யிறுத்தார்.

"ஏ! கடவுள் நிந்தகரே! பையோர்ரே நிஜிடியஸாகிய நான், இந்தப் பல்கலைக்கழகத்தில் தலைமை நிர்வாகியாக ஆணை செலுத்தும் காலம் வரையில், கல்வி கற்பிக்க எந்த ஒரு கடவுள் எதிரிக்கும் இடமளிக்கமாட்டேன்" என்று பதில் சொன்னார்.

"அப்படியானால், நீர் எனக்கு அளித்த தற்காலிகமான பட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும். கல்வி கற்பிக்க முடியாத ஆசிரியராக இருக்க நான் ஒருபொழுதும் விரும்பவில்லை. உம்முடைய பல்கலைக்கழகப் பட்டியலிலிருந்து என்னுடைய பெயரை அழித்துவிடும். உம்முடைய கொள்கையைப் போலவே, வெற்றுத்தன்மை கொண்ட உம்முடைய பட்டத்தால் எனக்குப் பெருமையளிக்க வேண்டாம்" என்று மிக்கக் கொதிப்புணர்ச்சியுடன் புரூனோ கதறினார்.

"உம்முடைய பெயரை அழித்துவிடுவதில் எமக்கு ஒரு தொல்லையும் கிடையாது. உம்முடைய பெயரால் அந்தப் பட்டியல் மதிப்பற்றுப் போகக்கூடாது என்பதுதான் எமது விருப்பமும். இன்று மாலை கதிரவன் சாயுங்காலத்திற்கு முன்பு உம்முடைய பெயர் அழிக்கப்பட்டுவிடும். கடவுளை நிந்திக்கும் துராத்மாவே! உம்மை இனி நீரேதாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். மார்பர்க், மத எதிரிக்கு, அவன் உள்நாட்டானாயிருந்தபோதிலும் சரி, அவன் வெளிநாட்டிலிருந்து வந்தவனானாலும் சரி, ஒரு சிறைக்கூடமாகத்தான் இருக்கும் என்பதை நீர் அறிந்துகொள்ளும்" என்று சினுசினுத்த முகத்தோடு கூறினார் தலைமை நிர்வாகி.

மறுபடியும் புரூனோ நாடோடியாகத் திரியும்படி நிலைமை ஏற்பட்டது. விர்டெம்பர்க்கில் தங்குமிடம் தேடியலைந்தார். அங்குள்ள பல்கலைக்கழகத்தில் புரூனோவுக்கு வேலையொன்று கிடைக்கப்பெற்று அதன் பாதுகாப்பில் இரண்டு ஆண்டுக்காலம் வாழ்ந்தார். விர்டெம்பர்க்கில் பேச்சு உரிமையும், இலக்கியப் பற்றும் மலிந்து விளங்கின என்று புரூனோவே குறிப்பிட்டுள்ளார். விர்டெம்பர்க் ஜெர்மன் மக்களுக்கு ஒரு ஏதென்ஸ்போல இருந்துவந்தது என்று சுட்டியுள்ளார். புரூனோ விர்டெம்பர்க்கை விட்டு அகலும்போது, விர்டெம்பர்க் பல்கலைக் கழகத்தைப் புகழ்ந்தும், பாராட்டியும் கூறிவிட்டுச் சென்றார்.

"என்னுடைய நம்பிக்கையைப் பொறுத்து நீ எந்தக் கேள்வியும் என்னைக் கேட்கவில்லை! என்னுடைய கொள்கை உனக்குப் பிடித்தமில்லாமலிருந்தும் நீ அவ்வாறு செய்யவில்லை! அருளிலும், அமைதியிலும், அறச் செயலிலும் தத்துவக்கலையிலும் நான் காட்டிவந்த அன்புக்காக, என்னை நீ போற்றிவந்தாய்! கல்வியின் அன்பனாகவும், அறிவின் தோழனாகவும் நான் இருந்துவர நீ என்னை அனுமதித்தாய்! உன்னிடையே பாவியிருந்த கருத்துக்களுக்கு மாறுபாடாக இருந்தபோதிலும், என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதில் நீ தடை ஏதும் கூறவில்லை! தத்துவக்கலையை ஒரு வழியாகவோ, ஒரு முடிபாகவோ நீ ஏற்றுக்கொள்ளவில்லை என்றபோதிலும், உன்னுடைய வெள்ளை யுள்ளமும், பக்தியுணர்ச்சியும், தூய்மை எண்ணமும், பழமைப்போக்கும் பழயகாலத்துக் கணிதத்தையும், இயற்கைப் பொருளியலையும் ஏற்றுக்

கொள்ளும் தன்மையனவாகக் காணப்பட்ட போதிலும், புதியமுறையைக் கற்றுக்கொடுக்க என்னை நீ அனுமதித்தாய்! நீ என்மீது சினந்து கொண்டதில்லை! அறிவையும், மனித அன்பையும், பண்பாட்டையும், உதவவேண்டும்-உழைக்கவேண்டும் என்ற உண்மைத் தன்மையையும் நீ காட்டினாய்! விடுதலை வேட்கையுணர்வைத் தடுக்காமலும், தனக்குக் கேடுவருமோ என்பதைப் பற்றிக் கவலைப்படாமலும், நாடோடியும், வெளிநாட்டானும், வெறுக்கப்பட்டவனுமாகிய என்னை நண்பனாகவும், உன்னோடு சேர்ந்த ஒருவனாகவும் வைத்துப் போற்றிவந்தாய்! நான் வறுமையால் வாடாமல், கல்வி கற்றுக்கொடுப்பதன்மூலம் என்னை நானே காப்பாற்றிக் கொள்ள அனுமதித்தாய்! உன்னுடைய அன்பின் நிழலிலே இருந்து, உன்னுடைய சுவர்களுக்கிடையில் தங்கி, இரண்டாண்டுக்காலம் செலவழித்த ஒருவன்மீது தூற்றப்பட்ட பழிச்சொற்களையெல்லாம் நீ ஒதுக்கித்தள்ளினாய்!” என்பது அவரது பாராட்டு மொழிகளில் சிலவாகும்.

இவ்வளவு அன்போடும் அமைதியோடும், மதிப்போடும் பாதுகாப்போடும் இருந்துவந்த இந்த இடத்தை விட்டு, ஏன் புரூனோ அகன்றார் என்பதற்கான காரணம் தெரியவில்லை. சொற்போர்கள் நடைபெறாத ஒரு இடத்தில் இருந்துகொண்டேயிருந்தது அவருக்குச் சோர்வைத் தந்ததுபோலும்!

1588-ல் புரூனோ விர்டெம்பர்க்கை விட்டு, பிரேக் நகர் சென்றார். அங்கு இரண்டாம் ருடால்ப் என்ற பேரரசன் ஆண்டுவந்தான். அவன் கல்வி கேள்விகளில் மேம்பாடுடையவன் என்பதைக் கேட்டறிந்து, புரூனோ அவனது அரசவைக்களம் புகுந்தார். புரூனோ கணிதம் பற்றிய பல கருத்துக்களை வெளியிட்டார். அவைகள் வேத நூல் கருத்துக்களுக்கு மாறுபட்டனவாக இருந்ததாலும், அரசன் மதநம்பிக்கையுடையவனாக இருந்த காரணத்தாலும், அவன் புரூனோவுக்கு ஆதரவு தரவில்லை; வெறுக்கத் தொடங்கினான்.

அங்கிருந்து ஹெல்ம்ஸ்டாட் நகர் நோக்கிச் சென்றார். அங்கு பிரன்ஸ்விக் ஆளும் மன்னனாக இருந்தான். அவனுடைய மூத்த மகனுக்கு, புரூனோ, இரண்டு மூன்று திங்கள்கள் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியராக இருந்தார். அரசன் இறந்தவுடன் புரூனோவுக்கு ஆதரவு அற்றுப்போயிற்று; எதிர்ப்புக் கிளம்பிற்று. போதியஸ் என்ற பாதிரியார், சர்ச்சில், மக்கள் கூடியிருக்கும்போது, புரூனோவை மதவிலக்குச் செய்து, அவரை மதங்கெட்டவராக எல்லோரும் மதிக்கவேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தார். ஓராண்டுக் காலம் வரையில் புரூனோ எப்படியோ சமாளித்துக்கொண்டு அந்த நகரிலேயே இருந்தார். பிறகு அந்த நகரைவிட்டு வேறிடம் பார்க்கும் நாடோடியாக ஆனார்.

1590-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து, 1591-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில், புரூனோ, பிராங்பார்ட் நகரிலிருந்து, சில புத்தகங்களை வெளியிட்டார். சர் பிலிப் சிட்னிக்குத் தெரிந்த நண்பர் ஒருவர், புரூனோவுக்கு, உண்டி, உறையுள், பாதுகாப்பு அளித்து, அவரைக் காப்பாற்றிவந்தார். இந்த நிலையில் இத்தாலியிலிருந்து புரூனோவுக்கு முடங்கல் ஒன்று வந்தது. ஜியோவன்னி மோசேனிகோ என்பவர், புரூனோவை வெனிஸ் நகரம் வந்து சேரும்படியும், ஆசிரியர் பொறுப்பு அவருக்கு அளிக்க விரும்புவதாகவும், தக்கப் பாதுகாப்பும் வரவேற்பும் அவருக்கு உறுதியாக அளிக்கப்படும் என்றும் அந்த முடங்கலில் குறிப்பிட்டிருந்தார். மோசெனிகோ என்பவர் ஒரு பெரும் பணக்காரராவார். அவரிடம் பாதுகாப்புக்கான எல்லா வசதிகளும் இருந்தன.

முடங்கலைப் படித்து முடித்ததும், அந்த முடங்கல் புரூனோவின் கைகளிலிருந்து, அவரை அறியாமலேயே கீழே விழுந்தது; புரூனோ மெல்ல எழுந்தார்; சாளரத்தின் ஓரத்திலே போய் நின்று, வெளியே பார்த்தார். இத்தாலியைப் பற்றிய நினைவுகள் அவருடைய உள்ளத்தில் உருண்டோடின. பத்தாண்டுக் காலம் வட ஐரோப்பாவின் பகுதிகளில் சுற்றிச் சுழன்று, அல்லற்பட்டு ஆதரவற்றுக் கிடந்த புரூனோவுக்கு இத்தாலியைக் காணவேண்டும் என்ற ஆவல் அவர் உள்ளத்தே கனிந்துகொண்டிருந்தது. இத்தாலிக்கு மீண்டும் ஏகும் வாய்ப்பு ஏற்பட்டவுடனே பெருமகிழ்ச்சி கொண்டார். கண்கள் ஒளிர்ந்தன; இதயம் குளிர்ந்தது. விரைவில் ஒரு வாட்டம் தோன்றி, அவருடைய முகத்தைக் குறுகச் செய்தது.

(அடுத்த இதழில் முடிவுறும்)

அந்தக் கடவுள்தானா?

[உலகிலுள்ள நன்மையையும் இன்பத்தையும் எடுத்துக்காட்டி, அதன்மூலம் கடவுளின் உண்மையை விளக்கப் பக்தகோடிகள் பலர் முயல்கின்றனர். உலகிலுள்ள தீமைக்கும் துன்பத்துக்கும் யாரைக் காரணமாக்குவது என்ற ஐயவினாவை எழுப்பி, அதன்மூலம் பக்தகோடிகளின் வாதங்களை, இக் கட்டுரையின் வாயிலாக உடைத்தெறிகிறார் அறிஞர் ராபர்ட் கிரீன் இங்கர்சால். ஆ-ர்.]

பிறப்பும் இறப்பும் அற்ற முழுமுதற் கடவுள் எல்லாப் பொருள்களையும் தோற்றுவித்தார்; அவரே எல்லாவற்றையும் ஆண்டுவருகிறார்; உயிரினம் அவருக்கு அடங்கி நடக்கவும் வேண்டும், நன்றியறிதல் காட்டவும் வேண்டும்; ஆண்டவன் மனிதனிடத்தில் சிலவற்றை எதிர்பார்க்கிறார்; எவன் அவருடைய விருப்பங்களை நிறைவேற்றி வைக்கிறானோ, அவன் மதபக்தனாகிறான்! இந்தவிதமான மதம் உலகெங்கணும் பெருவழக்காய் இருந்துவருகிறது.

இந்தக் கடவுள் பலிகளைக் கேட்டார்; பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் குருதியைச் சொரிந்தபோது, அவர் மிகவும் மகிழ்ச்சியுற்றார், என்றே பல நூற்றாண்டுகளாகப், பல கோடிக்கணக்கான மக்கள் நம்பிவந்தனர். பிற்பாடு எருது, வெள்ளாடு, வாத்து இவைகளின் குருதியை மட்டும் பெற்றுக்கொண்டே ஆண்டவன் பெருமகிழ்ச்சியுற்றார் என்று கொள்ளப்பட்டது. இந்தப் பலிகள் கொடுத்ததன் காரணமாக அல்லது இவற்றிற்குப் பதிலாகக் கடவுள் மழை, ஞாயிற்றின் வெளிச்சம், அறுவடை முதலியவைகளை வழங்கியதாகவும் கொள்ளப்பட்டது. இப்படிப்பட்ட பலிகளிடாமற்போனால்.கடவுள் பஞ்சம், கொள்ளை, நோய், வெள்ளம், நில அதிர்ச்சி ஆகியவைகளை அனுப்பிவிடுவார் என்றும் நம்பப்பட்டது.

கிருத்தவ மதக் கொள்கைப்படி, பலிகொள்வதில் கடைசி நிகழ்ச்சியாக நம்பப்பட்டது, ஆண்டவன் அவருடைய மகனின் குருதியைப் பெற்றுக்கொண்டதாகும். அவருடைய மகன் கொல்லப்பட்டதற்குப் பிறகு, ஆண்டவனாகிய அவர் முழுமனமகிழ்ச்சியடைந்தார், அதற்குப் பிறகு குருதி வேட்கையை அவர் கொள்ளவில்லை என்றும் நம்பப்பட்டது.

ஆண்டவன் வேண்டுதலையைக் கேட்டார், அதற்குப் பதிலிறுத்தார்; அவர் பாபங்களை மன்னித்தார்; உண்மையான நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்களைக் காப்பாற்றினார் என்று இந்தக் காலங்களிலெல்லாம், இந்த மக்கள் எல்லோராலும் நம்பப்பட்டுவந்தது. பொதுவாகச் சொல்லப்போனால், இதுதான் மதம்பற்றிய விளக்கமாகும்.

இப்பொழுது, நம்முன் நிற்கும் கேள்விகள்: எந்தத் தெரிந்த உண்மையின் மீதாவது மதம் கட்டப்பட்டதா? கடவுள் என்று சொல்லப்படும் ஒருவர் இருக்கிறாரா? உங்களையும் என்னையும் படைத்தவர் அவர்தானா? எந்த வேண்டுதலையாவது எப்பொழுதாவது பதிலிறுக்கப்பட்டதா? குழந்தையோ அல்லது எருதோ பலியிடப்பட்டதன் காரணமாக, மனமொழி மெய்களால் காணமுடியாத கடவுளால், எந்த ஒரு நன்மையாவது வந்து சேர்ந்ததா?

முதலில்—மக்களாகிய குழந்தைகளை எல்லையற்ற ஒரு பெருங் கடவுள்தாம் தோற்றுவித்தாரா?

அறிவில் குறைபாடுடையவர்களை ஏன் இவர் தோற்றுவித்தார்?

உடற்குறையுடையவர்களையும், உதவியற்றவர்களையும் ஏன் இவர் தோற்றுவிக்கவேண்டும்?

குற்றவாளியையும், மடயனையும், பைத்தியக்காரனையும் இவர் தோற்றுவிக்கக் காரணம் என்ன?

எல்லையற்ற பேரறிவும்—பேராற்றலும் கொண்ட இவர், குறைபாடுகளைத் தோற்றுவித்தற்கு எந்தச் சமாதானமாவது கூறமுடிகிறதா ?

இந்தக் குறைபாடுகளெல்லாம், இவற்றைப் படைத்த ஆண்டவனுக்கு விருப்பமளிக்கவா வந்திருக்கின்றன ?

இரண்டாவதாக—எல்லையற்ற ஒருபெருங் கடவுள் இவ்வுலகத்தை ஆளுகிறாரா ?

படைத்தலைவர்களும் பாராளும் மன்னர்களும், பேரரசர்களும் பேரரசிகளும் வாழ்வதற்கு இவர்தான் பொறுப்பாளியா ?

தொடுக்கப்படும் எல்லாவித போர்களுக்கும், கொட்டப்படும் எல்லாவகைக் குற்றமற்றவர்களின் குருதிக்கும் இவர்தான் பொறுப்பாளியா?

பன்னெடும் நூற்றாண்டுகளாக இருந்துவரும் அடிமை வாழ்விற்கும், சாட்டையடியால் தழும்புகள் ஏறிநிற்கும் முதுகுகளுக்கும், தாய்களின் அணைப்பிலிருந்து பிடுங்கப்பட்டு, விற்கப்படும் குழந்தைகளுக்கும், பிரிக்கப்பட்டுச் சீரழிக்கப்படும் குடும்பங்களுக்கும் இவர்தான் பொறுப்பாளியா ?

மதக் குற்றச்சாட்டுக்கும், மதவிசாரணைக் குழுவுக்கும், விரல்களை நெரித்துக் கசக்கிடும் விரலாணிக்கும், உடல்முழுதும் புண்ணாக்கிடும் இருப்பு முட்பலகைக்கும் இந்தக் கடவுள்தான் பொறுப்பாளியா ?

உறுதியாளரையும் உயர்வாளரையும் அழிக்க, கொடுமையையும் கீழ்மையையும் இந்தக் கடவுள்தாம் அனுமதித்தாரா ?

நாட்டுப் பற்றுடையோரின் குருதியைக் கொட்டவைக்கும்படி, கொடுமையாளர்களை இந்தக் கடவுள்தாம் அனுமதித்தாரா ?

தம்முடைய நண்பர்களைச் சித்ரவதை செய்யவும், கொளுத்தவும், தம் பகைவர்களுக்கு இவர்தாம் அனுமதி அளித்தாரா ?

இப்படிப்பட்ட கடவுள் எந்த அளவுக்கு மதிக்கத்தக்கவர் ?

தடுக்கக்கூடிய ஆற்றல் படைத்த எந்த நல்லறிவுடைய மனிதனாவது, தன்னுடைய பகைவர்களால், தன்னுடைய நண்பர்கள் சித்ரவதை செய்யப்படுவதையும், கொளுத்தப்படுவதையும் அனுமதித்துக்கொண்டிருப்பானா ?

ஆண்டவனுக்குப், பகைவர்களாக உள்ளவர்களைத், தன் நண்பர்களாக ஆக்கிக்கொண்டு, அவர்களை ஆதரித்து வருகிறது ஒரு பூதம் என்று, நாம் அறுதியிட்டுக்கொள்ளலாகுமா ?

எல்லையற்ற பேராற்றலும், நல்ல பண்பும் கொண்ட கடவுள்தான் இவ்வுலகை ஆளுகிறார் என்றால், புயற்காற்றுகள், நில அதிர்ச்சிகள், கொள்ளை நோய்கள், கொடும்பஞ்சம் ஆகியவை நிலவுவதற்கு நாம் எவ்வாறு சமாதானம் கொள்வது ?

மனிதர்களைக் கொன்றுதின்னும் காட்டு விலங்குகள், கடித்தால் சாகவேண்டிவரும் நச்சுப் பற்களைக்கொண்ட நாகங்கள் ஆகியவை வாழ்வதற்கு நாம் எவ்வாறு சமாதானம் கொள்வது ?

ஒரு உயிர் மற்றொரு உயிரைக் கொன்று தின்றே வாழவேண்டும் என்ற உலகம் இருந்து வருவதற்கு நாம் எவ்வாறு சமாதானம் கொள்வது ?

எல்லையற்ற பேரருளாளர் தாம், கூரிய அலகையும் — நகத்தையும், நச்சுப்பல்லையும் — கொடுக்கையும் கண்டுபிடித்து, அவற்றை உற்பத்திச் செய்தாரா ?

எல்லையற்ற நற்பண்பாளர்தாம், இரையைக் கொத்தித் தூக்கிச்செல்வதற்கு ஏற்றவண்ணம் கழுகுகளின் இறக்கைகளைப் பக்குவப்படுத்தி வைத்தாரா ?

எல்லையற்ற நற்பண்பாளர்தாம், வலிவற்றனவும், உதவியற்றனவுமான விலங்குகளைக், கொன்று உண்ணவேண்டும் என்று, கொடிய விலங்குகளைப் படைத்தாரா ?

எல்லையற்ற நற்பண்பாளர்தாம், கணக்கற்ற சாதாரண உயிர்க்கிருமிகள், அவைகளைக் காட்டிலும் உயர்ந்த உயிரினங்களின் சதையைத் தின்று, அதிலேயே வாழ்ந்து, அதிலேயே வளரவேண்டும் என்று அவைகளைப் படைத்தாரா ?

எல்லையற்றபேரறிவாளர்தாம், கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய கிருமிகள், கண்களிலுள்ள நரம்புகளைத் தின்று வாழவேண்டும் என்று, அவைகளை உற்பத்திச்செய்தாரா ?

ஒரு நுண்ணிய கிருமியின் வயிற்றுப் பசியைப் போக்குவதற்கு ஒரு மனிதனைக் குருடாக்கும் தன்மையை ஓர்ந்து பார்மின் !

உயிர் உயிரைத்தின்று வாழ்வதைச் சிந்தித்துப்பார்மின்! இரையாகும் எண்ணற்ற இரைகளைச் சிந்தித்துப் பார்மின்! கொடுமையின் பீடத்தில் நயகரா நீர் வீழ்ச்சிபோன்று சொரியப்பட்ட குருதி வெள்ளத்தைச் சிந்தித்துப்பார்மின்!

இப்படிப்பட்ட உண்மைகளையெல்லாம் நேர் நிறுத்திப் பார்க்கும்போது, மதம் என்பதுதான் என்னவாகத் தோன்றுகிறது?

மதம் என்பது அச்சம்!

அச்சம்! கடவுள் பீடத்தைக் காட்டியதும், பலியைக் கொடுத்ததும் அதுதான்!

அச்சம்! கோயிலை எழுப்பியதும், வழிபாட்டில் மனிதனின் தலையைக் குனியவைத்ததும் அதுதான்!

அச்சம்! முழங்கால்களைப் படியிடச் செய்ததும், வேண்டுதலை மொழியச் செய்ததும் அதுதான்!

மதம், அடிமைப் பண்புகளான, பணிந்து நடத்தல், அடங்கியொடுங்கியிருத்தல், தன்னை வெறுத்தல், மன்னித்துவிடுதல், எதிர்த்துப் போராடாமை முதலியவற்றைக் கற்பிக்கிறது.

மதப்பக்தியும், அச்சத்தன்மையும் கொண்ட உதடுகள், "அவன் என்னை வெட்டி வீழ்த்துகிறதானாலும், நான் அவனிடம் நம்பிக்கை வைக்கத்தான் செய்வேன்" என்ற சொற்றொடரை ஓயாமல் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டேயிருக்கின்றன. இதுதான் மனித வீழ்ச்சிக்குக் காரணமாகும் தாழ்வுப் படுகுழியாகும்.

மதம், தன்னம்பிக்கை—விடுதலைவேட்கை—மனிதத்தன்மை — உறுதி — தற்காத்தல் போன்ற பண்புகளை ஒருபோதும் மனிதனுக்குக் கற்றுக்கொடுப்பதில்லை.

மதம், கடவுளை ஆண்டையாகவும், மனிதனை அவருக்கு அடிமையாகவும் ஆக்குகிறது. அடிமை வாழ்வை இனிமையாக ஆக்குவதால், ஆண்டை பெருந்தகையாளராக ஆகிவிடமாட்டார்!

இந்தக் கடவுள் இருக்கிறார் என்றால், அவர் நல்லவர் என்பதை நாம் எப்படி அறிவது? அவர் அருள்பாலிப்பவர் என்பதை நாம் எப்படி நிரூபிப்பது? அவர் மக்களாகிய குழந்தை எவ்வகையில் கவலைப்படுகிறார் என்பதை நாம் எப்படித் தெளிவது? இந்தக் கடவுள் இருக்கிறார் என்றால், அவருடைய கோடானுகோடி ஏழைக் குழந்தைகள், நிலத்தை உழுவதையும், விதை விதைப்பதையும், நாத்து நடுவதையும், அவர் பலதடவை பார்த்திருக்கிறார்; அப்படிப் பார்த்தபோதெல்லாம், அவர்கள் தம் வாழ்க்கையை ஈடேற்ற, விளையப்போகும் கதிர்மணிகளை நம்பியிருந்தனர் என்பதை நன்கு அறிவார்; அப்படியிருந்தும் இந்த நல்லவர்—அருளாளர்—கடவுள் மழையைப் பெய்விக்காமலேயே நிறுத்திவிட்டிருக்கிறார். மனிதன் நட்ட செடிகளெல்லாம் காய்ந்து அழிந்துபோனதை அவர் பார்த்தார்; ஆனால் அவர் மழையை அனுப்பவில்லை. வறண்ட நிலத்தை வாடிய கண்களால், மக்கள் நோக்கிக்கொண்டிருந்ததை அவர் பார்த்தார்; அப்படியிருந்தும் அவர் மழையை அனுப்பவில்லை. தங்களிடத்திலுள்ள சிறிது உணவை கொஞ்சம், கொஞ்சமாக அவர்கள் தின்றுகொண்டு வந்ததைப் பார்த்தார்; பிறகு அவர்கள் பட்டினியால் வாடும் நாட்களையும் பார்த்தார்; அவர்கள் மெதுவாக அழிந்துவருவதையும் பார்த்தார்; அவர்கள் பட்டினியைப் பார்த்தார்; அவர்களது குழிவிழுந்த கண்களைப் பார்த்தார்; அவர்களுடைய வேண்டுதலைகளைக் கேட்டார். அவர்கள்தாம் வைத்திருந்த விலங்குகளையே அடித்துத் தின்றதையும் பார்த்தார்; தாய்மார்களும் தந்தைமார்களும் பசியால் பயித்தியம் பிடித்ததையும், தங்கள் பச்சிளங் குழந்தைகளைக் கொன்று தின்றதையும் அவர் பார்த்தார்; மேலேயுள்ள வானம் வெண்கலத்தகடு போலவும், கீழேயுள்ள தரை இருப்புத்தகடு போலவும் அவர்களுக்குக் காணப்பட்டதையும் அவர் பார்த்தார்; அப்படியிருந்தும் அவர் மழையை அனுப்பவில்லை. இரக்கம் என்னும் பூ இந்தக் கடவுளின் இதயத்தில் மலர்ந்தது என்று நாம் சொல்லமுடியுமா? மக்களாகிய குழந்தைகளைப்பற்றி அவர் கவலைப்பட்டார் என்று நாம் கூறமுடியுமா? அவருடைய அருளுள்ளம் என்றும் நிலைத்து நிற்கும் தன்மையது என்று நாம் இயம்பமுடியுமா?

இந்தக் கடவுள் 'மிகவும் நல்லவர்', ஏனென்றால், அவர் பெரும் புயற்காற்றை அனுப்பி, ஊர்களையெல்லாம் பாழ்படுத்தி, வயல்களிலெல்லாம் தந்தைமார்கள்—தாய்மார்கள்—குழந்தைகள் ஆகியோரின் உருவழிந்த பிணங்களால் நிரப்பினார் என்று நாம் நிரூபிப்பதா? அவர்

நிலத்தைப் பிளக்கச்செய்து, ஆயிரக்கணக்கான ஆதரவற்ற குழந்தைகளை அதனுல் விழுங்கச்செய்தார் என்றே, அல்லது அவர் எரிமலைகளைக்கொண்டு, நெருப்பு ஆறுகளை அவற்றினின்றும் பீறிட்டுக் கிளம்பச்செய்து, மக்களை மூழ்கடித்தார் என்றே எடுத்துக்காட்டி அவரது 'நல்லதன்மையை' நாம் நிரூபிப்பதா? நாம் அறிந்த இந்த உண்மைகளிலிருந்து, கடவுளின் 'நல்ல தன்மையை' நாம் ஊகித்துக்கொள்ளலாமா?

இந்தத் தாக்கங்கள் நடைபெருமலிருந்திருக்குமேயானுல், ஆண்டவன், உலகைப்பற்றிக் கவலைப்படுவதில்லை என்று, நாம் ஐயப்பாடு கொண்டிருப்போமா? பஞ்சமும் கொள்ளை நோயும், புயற்காற்றும் நில அதிர்ச்சியும் இல்லாமலிருந்திருக்குமேயானுல், ஆண்டவன் நல்லவரல்லர் என்று, நாம் நினைத்திருப்போமா?

மதவாதிகளின் கருத்துப்படி, கடவுள் எல்லா மக்களையும், ஒரேமாதிரியாகப் படைக்கவில்லை என்பதாகும். அறிவில், நிலையில், நிறத்தில் வேறுபாடு கொண்ட பல இனங்களை அவர் உண்டாக்கினுர். இதில் நல்ல தன்மை இருந்ததா, நல்ல அறிவுடைமை இருந்ததா?

உயர்ந்த இனங்கள், தங்களைத் தாழ்ந்த இனங்களாகப் படைக்காததற்காகக், கடவுளுக்கு நன்றியறிதல் தெரிவிக்கவேண்டாமா? ஆம்; தெரிவிக்க வேண்டும் என்று நாம் கூறினுல், பிறகு நான் மற்றெரு கேள்வி கேட்கிறேன்: தாழ்ந்த இனங்கள், தாங்கள் உயர்ந்த இனங்களாக ஆகவில்லை என்பதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தவேண்டுமா? அல்லது அவர்கள், தங்களை விலங்குகளாகப் படைக்கவில்லையே என்பதற்காகக், கடவுளுக்கு நன்றி தெரிவிக்கவேண்டுமா?

கடவுள், இந்தப் பல்வேறு வகைப்பட்ட இனங்களைப் படைத்தபொழுதே உயர்ந்த இனம் தாழ்ந்த இனத்தை அடிமைப்படுத்தும் என்பதை அறிவார்; தாழ்ந்த இனத்தினர் கைப்பற்றப்படுவர், இறுதியில் அழிக்கப்படுவர் என்பதையும் அறிவார்!

கடவுள் இதைச் செய்தார் என்றுல், சிந்தப் படப்போகும் குருதி வெள்ளத்தை அவர் அறிந்தார் என்றுல், தாங்கப்போகும் வேதனைகளை அவர் அறிந்தார் என்றுல், வெட்டப்பட்ட பிணக்குவியல்கள் கணக்கற்ற வயல்களில் நிரம்பிக்கிடந்ததை அவர் பார்த்தார் என்றுல், அடிமைகளின் குருதி ஒழுகும் முதுகுகளை அவர் கண்டார் என்றுல், குழந்தைகளை யிழந்த தாய்மார்களின் உடைந்த இதயங்களை அவர் நோக்கினுர் என்றுல், இவையெல்லாவற்றையும் அவர் பார்த்தார்—அறிந்தார் என்றுல், அவரைவிட வேறு கொடுமையான 'பூதத்தை' நாம் கருதிப்பார்க்க முடியுமா?

பின், ஏன் நாம் சொல்லவேண்டும், கடவுள் நல்லவர் என்று?

அழுத்தமான சுவர்களுக்கிடையிலே, உறுதியும் உள்ளன்பும் கொண்ட மாவீரர்கள், தங்கள் இறுதி மூச்சை விடும்படி செய்த இருட்டறைகள்; சிறந்தவர்களின் குருதிக்கறை படிந்து, அதனுல் புகழடைந்த தூக்குமரங்கள்; தழும்புகள் ஏறியும், குருதியைக் கசியவிட்டுக்கொண்டும் காணப்பட்ட முதுகுகளையுடைய அடிமைகள்; தீச்சுடரையே ஆடையாக உடுத்திக்கொண்டு, உண்மைக்காக உயிர் நீத்த உத்தமர்கள்; முள்ளாணிப் பலகையில் சித்ரவதைச் செய்யப்பட்ட மேலோர்கள்; மூட்டுகள் கழற்றப்பட்டுத் தசைகள் கிழிக்கப்பட்டவர்கள்; நீதிமான்களின் வெட்டப்பட்ட தலைகள், குருதி ஒழுகிய உடலங்கள்; உண்மைக்குப் பரிந்து பேசியோரின் பிடுங்கப்பட்ட கண்கள்; போராடிப்போராடி எந்தப் பலனும் பெறுமல் மாண்டொழிந்த எண்ணற்ற நாட்டுப்பற்றுடையோர்; தொல்லைகள் கொடுக்கப்பட்டு, அடிக்கப்பட்டுக் கண்ணீர் வடித்து வடித்துக் காலந்தள்ளிய மனைவிமார்கள்; ஒதுக்கித் தள்ளப்பட்ட குழந்தைகளின் நடுங்கும் முகங்கள்; இறந்த காலங்களில் கொன்று குவிக்கப்பட்ட கோடிக்கணக்கான மக்கள்; கொடுங்காற்றுக்கும் பேரலைக்கும் அகப்பட்டுச் செத்தொழிந்தோர்; வெள்ளப்புனலுக்கும் வெந்தழலுக்கும் இரையானோர்; கொடிய விலங்குகளுக்கு உணவானோர்; பேரிடியால் தாக்கப்பட்டோர்; எரிமலையின் நெருப்புக்குழம்பில் பட்டெறிந்தோர்; பஞ்சத்தில் அடிபட்டோர்; பிளேக் நோயால் பாதிக்கப்பட்டோர்; தொத்து நோயால் தொல்லைப்பட்டோர்; குருதியைக் குடித்துக் கொப்பளித்த வாய்கள்; நஞ்சை ஏந்தியிருந்த நச்சுப்பற்கள்; பல உயர்ந்தவர்களின் உடலில் காயங்கள் உண்டுபண்ணிக், தசைகளைக் கிழித்தெறிந்த அலகுகள்; கோழைத்தன்மையின் வெற்றிகள்; குற்றத்தின் கோலோச்சும் வெறித்

இலக்கியம்

நெடுவாயிலில் :: :: நில்லாதே செல்!

நீர்வளம் நிலவளம் பொருந்தி, இயற்கை அழகு கொழிக்கும் ஊர். எங்கணும் வயல்கள். வயல்களிலே செந்நெற் பயிர். காய்ந்து சாய்ந்த கதிர்கள், காற்றில் ஆடி, பேரொலி எழுப்பிய வண்ணம் இருக்கின்றன. கதிர்களைக் கொத்தித் தின்னவரும் பறவைகளின் ஆரவாரம் காதுகளைத் துளைக்கின்றது. வயல்களின் இடையிடையே நீர் நிறைந்த குளங்கள். நீரில் தாமரை படர்ந்திருக்கிறது. குளத்திலும் செந்நெற்பயிரை விளைத்திருப்பதால், அது தாமரைத் தண்டோடு வளர்ந்தெழுந்து, தாமரை இலைகளை நீக்கிக்கொண்டு, வெளியே கதிர் முற்றி நிற்கிறது. சாய்ந்த கதிர், தாமரைப்பூவிலே கிடந்து அசைகிறது. ஆடும் அரங்கில், அவையிலுள்ளார் புகழும்படி ஆடுகின்றவளுடைய நெற்றியில், எப்படித் தலைக்கோலத்திலிருந்து ஒரு வடத்தில் தொங்கும் வயந்தகம் என்னும் அணி அசையுமோ, அப்படித் தாமரைப்பூவின்மீது நெற்கதிர் அசைகிறது. இப்படிப்பட்ட இயற்கை வனப்பு சிறந்து காணப்படும் கழனிகள் காண்போர் உள்ளத்திற்கும் உடலுக்கும் குளிர்ச்சி பயக்கின்றன; இன்பந்தருகின்றன.

இத்தகைய எழில்மிக்க இயற்கைச் சூழல்களுக்கிடையேதான், தலைமகன் வனப்புமிக்க, இளமை நலங்குன்றா மங்கை நல்லாளோடு இல்லறம் நடத்திவருகிறான். அவர்களுக்கு அன்புமகன் பிறக்கிறான்; இல்லற இன்பம் உச்சநிலையடைகிறது. ஆனால் அந்த இன்பத்திற்கு மாசுபடியும் வகையில் தலைவன் பண்பொழுக்கத்தை இழக்கிறான், பாணன் ஒருவனின் கூட்டுறவால். பாணன் உதவியோடு பரத்தையற் சேரியில் அலைந்து திரிகிறான். நாள்தோறும் புதுப்புதுப் பரத்தையரிடம் இன்பம் நுகர்ந்து ஒழுக்கங்கெட்டவனாக இருந்து வருகிறான்.

காதலியோ காதலனின் செயல்கண்டு மனம் வருந்தியபோதிலும், அதை வெளிக்காட்டாது மகனோடு இல்லறத்தை இனிது நடத்திவருகிறாள். தானடைந்த துயரை மறைப்பதற்கு, மகனோடு கொஞ்சி விளையாடுவதையே ஆறுதலாகக்கொண்டிருக்கிறாள்.

சிறிது நாட்களுக்குப் பிறகு ஒருநாள், தலைவன் வீட்டிற்குள் நுழைகிறான். பரத்தையர் இன்பத்தில் தோய்ந்து, சோர்ந்து, அலுத்துப்போய்த் தன் அன்பு மனையாளையும் அருமை மகனையும் காணவேண்டும் என்ற விருப்போடு வருகிறான். குற்றம் தன்மேல் உள்ளதால், என்ன கூறுவாளோ என்ற அச்சத்துடன் மெல்ல அடியெடுத்துவைத்து நுழைகிறான்.

தலைவனைக் கண்டதும் தலைவிக்கு ஆத்திரம் பொங்கி எழுகிறது. கடுகடுப்பான முகத்தோடு நின்றுகொண்டிருக்கிறாள். தலைவி ஏதேனும்

தன்மை; கொடுமை அணிந்துகொண்டிருந்த முடிகள்; குருதிக்கறை படிந்த கைகளோடு இறுகத்தழுவும் அங்கிப்பட்டை அணிந்த ஆணவக்காரர்கள்; உரிமைவேட்கை உலகிலிருந்து அழிக்கப்பட்டுவிட்டதற்காகக் கடவுளுக்கு—கற்பனை பூதத்துக்கு—நன்றிசெலுத்திய குருமார்கள்: பயங்கர இறந்தகாலத்தின் இந்த நினைவுக்குறிப்புகள், இப்பொழுதும் இருந்துவரும் இந்தக் கொடுந்துன்பங்கள், அச்சமூட்டும் இந்த உண்மைகள், மனித சமுதாயத்தைக் காக்கவும் வாழ்த்தவுமான, விருப்பமும் ஆற்றலும் படைத்த கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை மறுக்கின்றன.

பேசுவாள் என்று எதிர்பார்க்கிறான் தலைவன்; தலைவி ஏதும் பேசாமல், தன் சினக்குறிப்பைக் கண்ணிலும், முகத்திலும் காட்டி நிற்கிறாள். பவளம்போன்ற அழகிய வாயினையும், பூப்போல அழகிய கண்ணையும் கொண்டிருக்கிற மகன் அங்குமிங்கும் தத்தித்தத்தி நடந்து விளையாடிக்கொண்டிருக்கிறான். தந்தையைக் கண்டதும் அவனிடம் தாவிக்கொண்டு ஓடுகிறான். தலைவன் புன்முறுவல்பூத்த முகத்துடன், மகனை வாரி யணைக்க கையை நீட்டிக்கொண்டு போகிறான். தலைவன் பரத்தையர் இடத்தில் பெற்றுக்கொண்ட கைவிரல் மோதிரங்கள், கழுத்தணி, மாலை இவைகளைத் தலைவிக்குக் காட்டக்கூடாது என்ற எண்ணத்தை மறந்துவிட்டு, அந்த அணிகளின் கோலத்தோடே வந்திருக்கிறான்.

குழந்தையைத் தூக்க, குணமிழந்த நிலையில் தலைவன் வருவதைக் கண்ட தலைவி, வெகுண்டு, வெடுக்கென்று தாவிக் குழந்தையைப் பற்றிக்கொள்கிறாள்.

"மகனை என்னிடத்தில் வரவிடு!"

"என்னுடைய மகனை நீ தொடாதே! எடுக்காதே; போய்விடு! அந்தப் பரத்தை மகள் அளித்த அணிகளையும் போட்டுக்கொண்டு, இங்கேவேறு வந்து நிற்கிறாயா! இவனை நீ எடுக்காதே! இவனை நீ எடுத்தால், இவன் வாயிலிருந்து ஒழுகும் நீர் உன் மார்பையெல்லாம் நனைத்துவிடும்; மார்பு நனைந்துவிட்டால், நீ மார்பில் பூசியிருக்கிற மணங்கமழுகின்ற சந்தனம் கரைந்துபோய்விடும்; அப்படிக் கரைந்துபோய்விட்டால், உன்னை வேறு எந்தப் பெண்ணோ கட்டித் தழுவியிருக்கிறாள் என்று கருதி, உனது மனதிற்கு மிகவும் பிடித்தமானவள் வருந்துவாளல்லவா? ஆகவே என் மகனை நீ எடுக்காமலிருப்பது நல்லது!" என்று தலைவி கடிந்துகொள்கிறாள்.

"நீதான் என்னைக் கடிந்துகொள்கிறாய். என்னிடத்தில் வரவிரும்பும் மகனை ஏன் விட மறுக்கிறாய்?" என்று தலைவன் நயந்து கேட்டுக்கொண்டு மகனைத் தழுவ வருகிறான்.

"இவன் உன்னுடைய மகனல்லன்; என்னுடைய மகன்! இவனை நீ தழுவாதே! உன்னுடைய அகன்ற மார்பு பரத்தையர்களால் விரும்பப்படுவது; அதில் கிடக்கும் பலசரங்களால் ஆன முத்துமாலையை, என் மகன், நீ தழுவுவாயேயானால், அறுத்துவிடுவான். அப்படி அறுத்துவிட்டால், அதனை உன்னால் மிகவும் விரும்பப்படுகிறவள் காண நேரிடும்; காண நேரிட்டால், வேறு யாரோ மாண்பும் மடப்பமும்கொண்ட மகளிர், உன் மார்பைத் தழுவி முயங்கியிருக்கிறார்கள் என்று கருதி, அவள் மனம் வருந்தி உன்னைச் சினந்துகொள்வாளல்லவா?" என்று தன் மனக்கொதிப்பைக் கடுமையான சொற்கள் மூலம், நயம்பட வெளிப்படுத்துகிறாள் தலைவி.

இதற்குள் மகன் தானாகவே தந்தையிடம் செல்ல முயலுகிறான். தலைவனும் முன்வந்து எடுத்து அணைத்துக்கொள்ள ஆவலுறுகிறான். தலைவி குழந்தையை இறுகப்பற்றிக்கொண்டு, தனக்குக் கேடு இழைத்த தலைவனிடம் போகாதவாறு தடுத்து நிறுத்திக்கொள்கிறாள்.

"என் மகனை, இதுவரையில், தேடிவந்து எடுத்து அணைத்துக்கொள்ளவேண்டும் என்று சிறிதுகூட கருதாத நீ, இவன் தானாக உன்னிடத்தில் வரும்போது ஏன் எடுக்கவேண்டும்? நீ ஒன்றும் அந்த அளவுக்கு அன்புகாட்ட வேண்டாம்! என் மகனை எடுக்காதே; போ! நீ இவனை எடுத்தால், இவன், வண்டுகள் மொய்த்துக்கொண்டு ஒலிக்கும்படியான தன்மை வாய்ந்த, உன்னுடைய தலையிலுள்ள பூமாலையைப் பிய்த்துப்போடுவான்; இதனை உனது மனதிற்குப் பிடித்தமானவள் காண நேரிடும்; அப்படி நேரிட்டால், உன்னை வேறு யாரோ பெண்கள் மயக்கியிருக்கிறார்கள் என்பதை இம்மாலை அறிவிக்கிறது என்று கூறி, அவள் உன்னை மிகவும் சினந்துகொள்வாளல்லவா?" என்று கூறி மேலும் மேலும் அவன் தவறை உணர்த்துகிறாள்.

தலைவி சொல்வதைக் கேட்டு, அச்சமும் வெட்கமும் அவனை அரித்தாலும், தலைவியின் கூற்றைக்கேளாதவன்போல் நடித்துக்கொண்டு, மகனைப் பாராட்டவும், சீராட்டவும் முற்படுகிறான். மகனை அன்பு மொழிகளால் அழைத்துக் கொஞ்சுகிறான். தன்னையும், மகனையும் இதுநாள் வரையில் புறக்கணித்துவிட்டு, இப்பொழுது கொஞ்சிக் குலாவ வருகின்ற தலைவனின் தன்மை கண்டு சினங்கொண்ட தலைவி அவனை மிகவும் வெறுத்துப் பேசுகிறாள்.

"ஏன் நீ இன்னமும் தெருவாயலில் நின்றுகொண்டிருக்கிறாய்? இங்கே உனக்கு என்ன

வேலை? நீ ஒன்றும் என் மகனைப் பொய்யாகப் பாராட்டவேண்டாம்; போய்விடு! பரத்தையரைப் பார்க்க நீ செய்துள்ள குறிகளை மறக்காதே, அங்கே போய்ச் சேர்! நீ இங்கேயே நின்றுகொண்டிருந்தால், இவன் உன் அணிகலன்களையெல்லாம் சிதைத்துச் சீரழிப்பான்! ஆகவே என் மகனை என்னிடத்தில் விட்டுவிட்டு, பரத்தையர் சேரியிலே, நீ குறிவைத்திருக்கிற, உனக்குப் பிடித்தமான பரத்தையிடம் செல்! இங்கே நில்லாதே!'' என்று புலந்து கூறுகிறாள்.

தன் குற்றத்தை யுணர்ந்து, தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளுமாறு, தலைவன் தலைவியிடம் குறையிரந்து நிற்கிறான். தலைவனின் இரங்கத்தக்க நிலையைக்கண்டு, இனித் திருந்துவான் என்ற உறுதியோடு, அவனோடு கொண்டிருந்த ஊடலைத் தீர்த்துக்கொண்டு, மகிழ்வோடு கூடியிருந்து இல்லறம் நடத்த அவளும் ஒருப்படுகிறாள்!

* * *

தன்னை வருத்தத்தில் ஆழ்த்திவிட்டு ஒழுக்கக்கேடனாகத் திரிந்துவந்த தன் கணவனைச் சொல்லாலடித்துத் திருத்துகிற தலைவியின் மாண்பு இக்காதற்காட்சியால் தெளிவுபடுத்தப்படுகிறது. மருதனிளநாகனார் பாடிய மருதக்கலி 14-ம் செய்யுளில் கண்ட கருத்தே இக்காதலோவியத்தில் விளக்கப்பட்டுள்ளது. கணவன் மனைவியர்க்கிடையே ஏற்படும் ஊடலைத் தவிர்க்க ஆசைக்குழந்தை முக்கிய காரணமாக இருந்துவிடுகிற உலகப் பொதுத்தன்மை, இச்செய்யுளில் திறம்படச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

* * *

புள்இமிழ் அகல்வயல் ஒலிசெந்நெல் இடைப்பூத்த
முள்அரைத் தாமரை முழுமுதல் சாய்த்ததன்
வள்இதழ் உறநீடி வயங்கிய ஒருகதிர்
அவைபுகழ் அரங்கின்மேல் ஆடுவாள் அணிநுதல்
வகைபெறச் செரீஇய வயந்தகம்போல் தோன்றும்
தகைபெறு கழனிஅம் தண்துறை ஊரகேள்;

அணியொடு வந்(து)ஈங்(கு)எம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்(பு)அகல நனைப்பதால்
தோய்ந்தாரை அறிகுவேன் யான்எனக் கமழு(ம்)நின்
சாந்தினால் குறிகொண்டாள் சாய்குவள் அல்லளோ;

புல்ல(ல்)எம் புதல்வனைப் புகல்அகல் நின்மார்பில்
பல்காழ்முத்(து) அணிஆரம் பற்றினன் பரிவானாள்
மாண்இழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பில்
பூணினால் குறிகொண்டாள் புலக்குவள் அல்லளோ;

கண்டேஎம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி
வண்(டு)இமிர் வகையினர் வாங்கினன் பரிவானன்
நண்ணியார்க் காட்டுவ(து) இதுவெனக் கமழு(ம்)நின்
கண்ணியால் குறிகொண்டாள் காய்குவள் அல்லளோ;

எனவாங்கு,

பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி
ஆங்கே அவர்வயின் சென்றீ அணிசிதைப்பான்
ஈங்(கு)எம் புதல்வனைத் தந்து. —[மருதக்கலி—14]

[புள் - பறவை; இமிழ் - ஒலிக்கின்ற; வள் - வளவிய, வளப்பமான; நுதல் - நெற்றி; வயந்தகம் - நெற்றியில் தொங்கவிடும் ஒருவகை நகை, அது நெற்கதிர்போல் இருக்கும்; தகைபெறு - அழகைப்

கிளியோபாவின் காதலன்

[இரா. செழியன்]

(முன் இதழ் தொடர்ச்சி)

உள் அறையைவிட்டு—மார்க்கஸ் ஆண்டனியை விட்டு, ரோம் நகர நாகரிகத்தை விட்டு, வெளியே நான் வந்தேன். வெளியில் வந்ததும் தான், வந்து இருபதாம் நூற்றாண்டின் காற்றை வாங்கியதும்தான் நான் பழைய நிலைமையடைந்தேன். உடைகள் மாற்றும் அறையில் உட்கார்ந்து, நான் போட்டிருந்த—இல்லை சுமந்துகொண்டிருந்த இரும்பு உடைகளைக் கழற்றிக்கொண்டிருந்தேன். இரும்புக் கவசமும், தலை முடியும்! அப்பாடா! எவ்வளவு கனமாக இருந்தன! இந்த உண்மையான ரோம் வீரர்கள் அவைகளை எப்படித்தான் அணிந்துகொண்டு உலவினார்களோ, தெரியவில்லை.

கதவைத்திறந்துகொண்டு, உள்ளே ஒரு "படைத்தலைவர்" வந்தார். தலை மூடியை எடுத்ததும், அவர்தான் மாசிலாமணியைப் பார்த்துக்கொண்டிருக்கும் டாக்டர் சம்பந்தம் என்று தெரிந்தது.

"டாக்டர்! எப்படியிருக்கிறது?" என்று நான் கேட்டேன்.

"உஸ்!" என்று அவர் பெருமூச்சுவிட்டார். "நேற்று சைப்ரஸ் தீவுக்குக் கப்பல் படைகளுடன் போகச்சொன்னான். இன்று லிபியா நாட்டு மன்னனைப் பார்த்துவரும்படி அனுப்பியிருக்கிறான்!"

எனக்குச் சிரிப்பு வந்தது. "எவ்வளவு நாளைக்குத்தான் இப்படி நாடகம் நடித்துக்கொண்டிருக்கிறது. மாசிலாமணி எப்பொழுதுதான் தன் நினைவு வந்து பழைய நிலைக்கு வருவான்?"

"ஓ! அவன் நன்றாகத்தான் இருக்கிறான், படைத்தலைவர்களைக் கட்டளையிட்டுக்கொண்டு, மதுக்கோப்பைகளை உடைத்துக்கொண்டு! சொல்லமுடியாது, இன்னும் சிறிது நாளைக்கு இதைச் செய்துபார்க்கலாம். இதேபோல் இருந்த மற்ற சிலருக்கு......"

"இதேபோலா? நான் இதுதான் புதிதாக இருக்கிறது என்று நினைத்தேன். இதற்கு முன்னும் இதைப்போல ஆண்டனியாக, வீரனாக வேஷம் போட்டுக்கொண்டு திரிந்தவர்கள் இருந்திருக்கிறார்களா?"

"இதுமாதிரி ஒரு நாள் வேஷம்போட்டு, பிறகு மற்றவர்களையெல்லாம் வேஷம்போட்டுக் கொள்ளச் செய்யும் நிலைமை வந்ததில்லை. மாசிலாமணி தன்னை வேறொருவனாக நினைத்துக் கொண்டது மட்டுமல்ல, தான் வாழுகிற காலத்தையே மாற்றியமைத்துக்கொண்டான். இருந்தாலும், இன்னும் சிறிது நாளைக்கெல்லாம் குணம் தெரியும் என்று நினைக்கிறேன். முன்புபோல் நாடித்துடிப்பு அதிகமில்லை, உணவு சரியாக எடுத்துக்கொள்ளுகிறான்."

"ஆக, குணமாகிவிடுவான் என்று சொல்லுகிறீர்கள்!"

"அதைப்பற்றிக் கவலையே வேண்டாம் என்னிடம் சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களில் பலர், மீண்டும் நல்ல நிலைமையில், பாங்

பெறுகின்ற; அம் - அழகிய; தண் - குளிர்ந்த; துறை - நீர்த்துறை; புரை - ஒலிக்கின்ற; கமழும் - மணக்கின்ற; சாந்து - சந்தனம்; குறிகொண்டாள் - மனத்தாற்கொண்டவள்; புல்லல் - தழுவாதே; பல்காழ்முத்து - பலவடங்களையுடைத்தாகிய முத்து; ஆரம் - மாலை; மாண் - மாண்பு; இழை - நகை; மடம் - மடப்பம்; பூண் - நகை; சென்னி - தலை; இமிர் - ஒலிக்கின்ற; வகையினர் - கூறுபாட்டைக்கொண்ட பூங்கொத்து; நெடுங்கடை - பெரிய வாயில், தெரு வாயில்.]

கர்களாக, வியாபாரிகளாக, பெரியமனிதர் களாகச், சிலர் அரசாங்கத்து முக்கிய பதவி களில்கூட.''

''என்ன உங்களிடம் பைத்தியக்காரர்களாக இருந்தவர்களா?''

''உஸ், அவர்களைப்பற்றிக் கேட்காதே! அரசாங்க ரகசியங்கள்! வெளியே தெரியக் கூடாது!'' என்று டாக்டர் சம்பந்தம் சிரித்துக்கொண்டு போனார்.

நான் மட்டும் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். டாக்டர்கள் எப்பொழுதும் நம்பிக்கையில்லையென்று சொல்வதில்லை! அதற்குள் மற்றும் சிலர் உள்ளே போகவும், உள்ளே போனவர்கள் வெளிவரவும் ஆரம்பித்தனர். நானும், அந்த இடத்தை விட்டு அகன்றேன்.

மறுபடியும் இரண்டு மூன்று தடவைகள் நான் மாசிலாமணியைப் பார்க்கப் போயிருந்தேன், முன்போல ஏதாவது ஒரு ரோம் நாட்டு உடையை யணிந்துகொண்டு. முதல் தடவைக்குப் பிறகு எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று எனக்கு நன்றாகப் பழகிவிட்டது. ஆனால் புதிதாக வருபவர்கள் சிலசமயங்களில் தவறுதலாக நடந்துகொண்டுவிடுவார்கள். ஒரு நாள்—அன்று உள்ளே நானும் போயிருந்தேன்—உள்ளே ரோம் உடையில் வந்த ஒருவர், தனக்குக் கொடுக்கப்பட்ட பெயரை மறந்து, வேறு ஏதோ ஒரு பெயரை உளறிவிட்டார். பொல்லாத வேளையாக, அந்தப் பெயர் ஆண்டனிக்கு எதிரியான ஆக்டேவியஸ் சீசருக்கு வேண்டியவர்களில் ஒருவனின் பெயர்! பெயரைக் கேட்டதுதான் தாமதம், ஆண்டனி வாளை உருவிக்கொண்டு, ''எங்கே, அந்தத் துரோகி!'' என்று அவன்மீது பாய்ந்து விட்டான். கூடியிருந்தவர்களெல்லாம், மிகக் கஷ்டப்பட்டு, அவர்களைப் பிரித்துவிட்டோம். உள்ளே வந்த 'வீரர்', தப்பினால் போதுமென்று வெளியில் ஓடிவிட்டார். அந்த 'வீரர்' வேடிக்கையாகப் பார்க்கவந்தார், சண்டை மூளுமென்று கண்டாரா?

சில சமயங்களில் வேடிக்கையாக இருந்த போதிலும், மற்ற நேரங்களில், அதிலும் மாசிலாமணியின் தாய்தந்தையரைப் பார்க்கும் பொழுது, அவனுடைய நிலையைப்பற்றி எல்லோருக்கும் வருத்தமே உண்டானது. அவனுக்குற்ற நோய் என்று தீருமோ என்ற ஏக்கத்தில் அவர்கள் ஆழ்ந்திருந்தனர்.

வசந்தா

அன்று அப்பாவுடன் கிளம்பி, நானும் அடையார் போட் கிளப்புக்கு வந்திருந்தேன். அப்பா அந்தக் கிளப்பில் அங்கத்தினர் என்ற போதிலும், நாங்கள் தினந்தோறும் வருவதில்லை, வர முடிவதில்லை. நேரமிருந்தால் அப்பா அங்கு வந்து, படகில் அந்த ஏரியில் சற்றுச் சுற்றிவிட்டு வருவார். சில சமயங்களில் அவரே துடுப்புகளை அசைப்பார், இல்லாவிட்டால் சுக்கானைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பார்; நானும், என் அண்ணனும் துடுப்புகளைப் போட்டுக்கொண்டு வருவோம். ஆனால் அன்று மணியண்ணன் எங்கோ வெளியில் போய்விட்டார்; அம்மாவுக்கு வழக்கம்போல் சற்றுத் தலைவலி, ஆதலால் பக்கத்துப் பங்களாவில் பேசப் போய்விட்டார்கள். நானும் அப்பாவும்தான் மிச்சம்.

கிளப்புக்கு வந்ததும், யாரோ ஒருவர்—சங்கரபாண்டியன் என்று அறிமுகப்படுத்தினர்கள்—அப்பாவுடன் படித்தவராம், வேலை பார்த்தவராம், இருவரும் பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஆண்கள்—அதிலும் வயது வந்த இரு நண்பர்கள் பேச ஆரம்பித்துவிட்டால் கேட்க வேண்டுமா? நான் மிகவும் பொறுமையுடன் அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அலட்சியமாயிருந்தால், பின் வீட்டிற்குப் போனதும், அப்பா கண்டிப்பார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் கஷ்டத்துடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்த அப்பா, ''வசந்தா! நீ வேண்டுமானால் படகை எடுத்துக்கொண்டு, போய்விட்டு வருவதுதானே!'' என்றார். சரியென்று நான் எழுந்து, ஒரு தனிப்படகை அவிழ்த்துவிட்டு, ஏரிக்குள் நகர்ந்தேன்.

சில பெரும்படகுகள் நான்கைந்துபேர் தள்ளிவிடும் வேகத்தால், நீரைக் கிழித்துக்கொண்டு அங்குமிங்கும் விரைந்து சென்றுகொண்டிருந்தன. நான் மிக மெதுவாக அசைத்துக்கொண்டு போனேன். மற்ற படகுகளிலிருந்து விலகி, எனது படகு மேற்குப்பக்கமாக நகர்ந்து போய்க்கொண்டிருந்தது. மணி அப்பொழுது ஐந்துக்குமேல் ஆறுக்குள் இருக்

கும். மேற்கில் அடர்ந்த மரங்களின் உச்சியில் கதிரவன் ஒளி கூத்தாடிக்கொண்டிருந்தது. அந்த மரங்களின் நீண்ட நிழல்கள் ஏரிமீது படிந்து வந்தன. வட்டமிடும் மீன்கொத்தி திடீரென்று தண்ணீரில் பாய்ந்து, மீண்டும் மேலெழுந்து விளையாடிக்கொண்டிருந்தது. தண்ணீரில் சலசலக்கும் என் படகுத் துடுப்பு களைத்தவிர, வேறெந்த சத்தமும் அதிகமாகக் கேட்கவில்லை. உண்மையாகவே சத்தமும் கூச்சலும் மிகுந்த நகரிலிருந்து வெகு தொலை வில் அமைதிக்காக ஆக்கப்பட்ட தனியிடம் போல அது தோன்றியது. நான் பல தடவை அங்கு வந்த போதிலும், அன்று போல் தனி யாக வந்ததில்லையாதலால் நன்கு கவனித்த தில்லை பேசாமல் துடுப்பை எடுத்துப் போட்டு விட்டு, படகிலேயே உட்கார்ந்திருந்தேன். அடிக்கும் காற்றிலே படகு மெதுவாக அசைந்துகொண்டிருந்தது.

பின் இருட்டுவதுபோலத் தோன்றியதும் தான், படகைத் திருப்பிக்கொண்டு நான் வர ஆரம்பித்தேன். சற்றுமுன் வெண்மையாகப் பரந்துகிடந்த ஏரி, இப்பொழுது கருப்பு நிற மாக மாறிக்கிடந்தது. நான் வேகமாகத் திரும்பி வந்துகொண்டிருந்தேன். நான் சிறிது தூரம் போனதும் யாரோ கூப்பிடுவதுபோலச் சத்தம் கேட்டது. சுற்றிலும் பார்த்தேன் ஒரு வரையும் காணோம். மறுபடியும் படகைத் தள்ளினேன், மீண்டும் சத்தம் கேட்டது. கரையோரத்தில் யாரோ கையையசைத்துக் கூப்பிடுவதுபோல எனக்குப் பட்டது. ஒருசம யம் நான் திரும்ப நேரமானது கண்டு, அப்பா தான் வேலைக்காரர்கள் யாரையாவது அனுப்பி யிருப்பாரோ என்று கரையோரத்துக்குப் படகை நகர்த்தினேன். சற்று அருகில் போன தும், கரையோரத்தில் நின்றுகொண்டிருந்த உருவத்தைப் பார்த்ததும் எனக்கு ஆச்சரிய மும், பயமும் உண்டாயின.

யாரோ ஒருவர்—எந்தநாட்டார் என்றுகூட புரிந்துகொள்ள முடியவில்லை. கையிலே இரும் புப் பட்டை, காலிலே சுற்றிக் கட்டப்பட்ட வார், இடுப்பிலே ஒரு வாள்,—யாரோ சிவப்பு இந்தியரோ, அல்லது ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியர நாட்டைச் சேர்ந்தவரோ தெரியாது. முதலில் ஆச்சரியத்தால் அந்த மனிதனை நான் பார்த் துக்கொண்டிருந்தேன். அவனும் என்னைத் திரும்ப உற்றுப்பார்க்க ஆரம்பித்ததும், எனக் குப் பயம் வந்தது.

அந்த விசித்திர மனிதன், தண்ணீரில் ஒரு அடி வைத்து, "கிளியோ! என்னைத் தனியாக விட்டு எங்கே போனாய்?" என்று கேட்டான்.

அவன் என்ன சொல்லுகிறான் என்றே எனக் குப் புரியவில்லை. அவன் படகில் சென்று யாருக்காகவோ காத்துக்கொண்டிருக்கிறான், அந்தச் சமயத்தில் வந்த என்னைத் தவறுதலாக கேட்கிறான் என நினைத்து, "மன்னிக்கவும்! நீங்கள் தேடிக்கொண்டிருப்பவர் நானல்ல!" என்று படகைத் திருப்பினேன்.

"உனக்காகத்தான் காத்துக்கொண்டிருந் தேன்! அதற்குள் போய்விடாதே!" என்று அவன் தண்ணீருக்குள் நகர்ந்து, என் படகுப் பக்கம் வர ஆரம்பித்தான். எனக்குப் பயம் அதிகரித்தது. சந்தடியற்ற இடம், இருட்டு வேளை, தனியாக ஒரு பெண் ஒரு திருடனிடம் சிக்கிக்கொண்டால் என்ன ஆவது? என் பலம் கொண்டமட்டும் துடுப்பை அசைத்து அந்த இடத்தைவிட்டு வேகமாகப் போனேன். கொஞ்சதூரம் போனதும்தான் எனக்குத் தைரியம் வந்தது திரும்பிப்பார்க்க. அவன் தண்ணீரில் நின்றபடி ஏதோ கூவிக்கொண் டிருந்தான். பல்லைக் கடித்துக்கொண்டு, நான் துடுப்பை எடுத்து, படகைத் தள்ளிக்கொண்டு வந்து சேர்ந்தேன். படகுகள் சேர்க்கும் இடம் வந்தபோது, நிதானமாக என்னால் படகை நிறுத்தமுடியவில்லை. வேகமாகக் கரையின்மீது மோதி நின்றது. அப்பாடா! ஆபத்து நீங்கியது என்று பெருமூச்சுவிட்டு, கரைமீதேறிவந் தேன். அப்பாவும், அவருடைய நண்பரும் இன்னும் பேசிக்கொண்டுதான் இருந்தனர். பூகம்பம் ஏற்பட்டு, பக்கத்திலிருக்கும் கட்டி டமே இடிந்துபோனால்கூட அவர்கள் தங்க ளுடைய பேச்சை நிறுத்தியிருக்கமாட்டார் கள் போலத் தோன்றியது.

பின் வீட்டிற்குப் புறப்பட்டோம். என் அப்பாவும், அவருடைய நண்பரும் முன்னால் நடந்து சென்றார்கள். நான் பின்னால் தூக்கத் தில் நடந்து வருபவளைப்போல, நடந்து சென்றுகொண்டிருந்தேன். அவர்கள் பேசிக் கொள்வதுகூட ஏதாவது நல்லதாகப் பேசிக் கொண்டிருந்திருக்கக்கூடாதா? பேய், பிசாசு, அவைகளுக்கு ஆதாரமிருக்கிறதா, என்று

இருவரும் பேசிக்கொண்டு சென்றனர். சற்று முன் கண்ட உருவம் மீண்டும் என் மனக்கண் முன் வந்தது. ஒருவேளை, ஏதாவது, அவர்கள் பேசிக்கொள்வது இறந்துபோன ஒருவரின் பிசாசாக இருந்தால்!....அப்படி நினைத்ததும், மீண்டும் அந்த உருவம் கூப்பிட்டுக்கொண்டு என் பின்னால் வருவதுபோலத் தோன்றியது. அதற்குள் என் அப்பாவும், அவர் நண்பரும் சற்றுத் தூரத்துக்குமுன் போய்விட்டார்கள். ஓடிப்போய் அவர்களைப் பிடித்துவிடலாமென்றாலோ, கால்கள் நகர மறுத்தன. நல்லவேளையாக, அப்பா பார்த்து, "வசந்தா! வசந்தா!" என்று கூப்பிட்டுத், திரும்பிவந்தார், "ஏன் கால் வலிக்கிறதா?" என்று கேட்டார். இல்லையென்று தலையசைத்துக்கொண்டு அவர்களுடன்கூட நடந்துசென்றேன்.

வீட்டுக்குள் அடியெடுத்து வைப்பதற்குள், அம்மா என்னைப்பார்த்து "ஏண்டி வசந்தா! இப்படி முகம் வெளுத்திருக்கிறது?" என்று முகத்தைப் பிடித்து, "குளிர் காலம், ஒரு கம்பளியைப்போட்டுக்கொண்டு...." என்று ஆரம்பித்தார்கள்.

"ஆமாம், குளிர்காலம், காய்ச்சல், ஜன்னி, எல்லாம் வந்துவிடும். நீயே குழந்தைகளுக்கு எல்லாவற்றையும் கொண்டுவந்துவிடுவாய்போலிருக்கிறது. போ! போய்ச், சாப்பாடு போடச் சொல்!" என்று அப்பா அதட்டினார். எனக்குப் பசியில்லையென்று சொல்லிவிட்டு, நான் போய்ப் படுத்துக்கொண்டேன்.

பிறகு இரண்டு நாட்களாக நான் வீட்டை விட்டு வெளிக்கிளம்பாமல் இருந்தேன். தோட்டத்தில் உட்கார்ந்திருக்கும்பொழுதோ அல்லது கண்ணாடிமுன் அமர்ந்திருக்கும்பொழுதோ சிறிது சலசலப்பு கேட்டாலும், நான் சற்று பயத்துடனேயே எழுந்து நிற்பேன். ஆனால், நான் எதிர்பார்த்தபடி ஒன்றும் இருக்காது. இருட்டுகிற வேளையில், தனியான அந்த இடத்தில் நான் பார்த்த விசித்திர உருவம்—வெறும் மனப்பிரமையாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைத்து, மறந்துவிட முயன்றேன். நான் கண்டதாக யாரிடமும் சொல்லியிருந்தாலும், அம்மாவாயிருந்தால் தலையைச் சுற்றி திருஷ்டிகழிப்பார்கள், அப்பாவாயிருந்தால் மனோதத்துவம் பற்றி பேச ஆரம்பித்திருப்பார்கள், ஆனால் யாரும் நம்பமுடியாதது.

நானும் அப்பாவும் உட்கார்ந்து பத்திரிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்தபொழுது, சங்கரபாண்டியன்—முதல்நாள் அப்பாவுடன் விடாமல் பேசிக்கொண்டிருந்தார் என்று சொன்னேனே, அவர்தான்—வந்தார்.

"எங்கே, நேற்று வரவில்லை?" என்று அப்பா கேட்டார்.

"ரோமுக்குப் போயிருந்தேன்" என்றார்.

"ராமு வீட்டுக்கா? அது யார், நமது சோமு வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற புதுக் கட்டிடம்...."

"இல்லை, இல்லை! ரோம் நகரத்துக்கு!"

அப்பாவுக்கு இன்னும் புரியவில்லை.

"உங்கள் கிராமமா?" என்று அப்பா கேட்டார்.

"என்ன, பூகோளம் மறந்தே போய்விட்டதா? ரோம், இத்தாலி தலைநகரான ரோம்!" என்று சங்கரபாண்டியன் அழுத்திச் சொன்னார்.

அப்பா கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக்கொண்டு, "எப்படி முடியும், நேற்றுகூட நீ சென்னையில்தான் இருந்திருக்கவேண்டும்?" என்றார்.

"ஆமாம், அதுதான் வேடிக்கை. சென்னையிலேயே இருந்தேன், ஆனால் ரோம் போய்வரவும் முடிந்தது. இதோ பார்! ரோம் இப்பொழுது இத்தாலியில் இல்லை! இந்த வீட்டிலிருந்து இரண்டு பர்லாங்குக்குள் வந்துவிட்டது!"

அப்பாவுக்கே, அவர் புதிர்போட்டு பேசுவது அலுத்துவிட்டது.

சங்கரபாண்டியன் மிக உற்சாகத்துடனேயே ஆரம்பித்தார். "முதலில் நான்கூட நம்பவில்லை. நாம் அன்று கிளப்பிலிருந்து வந்ததும், நான் உங்களை விட்டுப் பிரிந்து கொஞ்சதூரம் போனதும், சுந்தரமூர்த்தியைப் பார்த்தேன். சுந்தரமூர்த்தி எனது பக்கத்து கிராமத்திலே பெரிய மிராசுதார்—இங்கே "சுந்தர பவன்" என்று போட்டிருந்ததல்லவா, ஒரு பெரிய வெள்ளைக் கட்டிடமும் தோட்டமும் அதில்தான் இருக்கிறார். நான் அவனைப் பார்த்துப் பத்து ஆண்டுக்குமேலிருக்கலாம். ரொம்ப நல்ல குணம் — அதிருக்கட்டும்,

இரண்டு நாள் முன்பு அவனைப் பார்த்து, இருவரும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அவன் மட்டும் மிகச் சோர்வாகக் காணப்பட்டான். மனிதனுக்கு எவ்வளவோ கவலைகள். அதிலும் நமது வயதிற்குள் அவைகளையெல்லாம் பார்த்துதான் இருக்கவேண்டும்! ஆனால் சுந்தரமூர்த்திக்கு என்ன நேர்ந்ததென்று எனக்குத் தெரியவில்லை. கடைசியாக அவனே எனக்குச் சொல்லிவிட்டான்.

அவனுடைய பையன் மாசிலாமணி—அவனை நான் பதினைந்து ஆண்டுக்குமுன் பார்த்தபொழுது ஏழெட்டு வயதுப் பையனாக, குறுகுறுவென்று இருந்தான்—அவன் இங்கே கல்லூரியில் படித்தானாம் கடைசி வகுப்பாம். அப்பொழுது ஒரு நாடகத்தில் ஆண்டனிபோல வேஷம்போட்டு நடிக்கும்பொழுது, ஒரு மரம் தலையில் விழுந்து, மூளை குழம்பி, பழைய நினைவையிழந்துவிட்டான், தான் உண்மையிலே ஒரு ரோம் வீரன் என்று அவன் நினைத்துக்கொண்டு இருக்கிறான். அதனால் அவனுடைய வீட்டில் சில அறைகளை ரோம் காலத்தில் இருப்பதைப்போல அலங்கரித்து அதில் வைத்திருக்கிறார்கள். யாராவது அவனைப் பார்க்கவேண்டும் என்றால், ரோம் அல்லது கிரேக்க நாட்டு அந்தக்காலத்திய உடையில்தான் போகவேண்டும். அவனுக்கு நாடகம் உண்மையானதாகிவிட்டது. மற்றவர்கள் இப்பொழுது நடிக்கின்றனர்.''

''மனோதத்துவப்படி, இது ஒரு வேடிக்கையான சம்பவமாகும்'' என்று அப்பா சொன்னார்.

குப்பைமேட்டின்மேல் உட்கார்ந்துகொண்டு, கோலோச்சும் மன்னனாகத் தர்பார் நடத்தும் பைத்தியங்களில் இதுவும் ஒருவகை; யென்று நினைத்துக்கொண்டேன்.

''நான்கூட நேற்று அந்த வீட்டுக்குப்போய், அந்தப் பிள்ளையைப் பார்த்தேன். ஆமாம், நான் ஒரு எகிப்துநாட்டுக்காரனைப்போல வேஷம் மாற்றிக்கொண்டு போனேன். அவனைப் பார்த்தால் சிரிப்புதான் வந்தது, பிறகு பரிதாபமாகவும் இருந்தது. தலையில் சிறு வளையம் போன்ற கிரீடமும், கையில் இரும்பு பட்டைகளும், காலில் வார் சுற்றப்பட்ட செருப்பும், இடுப்பில் ஒரு வாளும்! அப்படியே ஒரு மார்க்கஸ் ஆண்டனியாக அவன் உலவிக்கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும், 'எங்கே அரசி?' என்று கேட்டான். 'அரசி அரண்மனையில் இருப்பாள்!' என்று பதிலளித்தேன். 'எகிப்து நாட்டவர்களே எப்பொழுதும் விளையாட்டுப் பேச்சினர்' என்று சிரித்துக்கொண்டான்.'' சங்கரபாண்டியன் சிரித்துக்கொண்டார். ''ஆக நானும் ஒருமுறை நடித்துவிட்டேன்.''

''ஒரு முறையென்ன, பாதி வாழ்வே நீ நடித்துக்கொண்டுதானே யிருக்கிறாய்?'' என்று அப்பா கேலிசெய்தார்.

திடீரென்று என் மனதில் அந்த ஞாபகம் வந்தது. சங்கரபாண்டியன் சொன்னதைப் போல, அந்த வெள்ளை மாளிகையின் பின்புறம் தான்,—ரோம் உடையணிந்தவன்—தலையில் சிறு கிரீடம், இடுப்பிலே வாள்—நிச்சயமாக அந்தப் பைத்தியத்தைத்தான் நான் சந்தித்திருக்கிறேன். அவன் ஒரு பைத்தியமென்று தெரிந்திருந்தால் நான் பயந்திருக்கமாட்டேன். அவன் ஒரு பைத்தியம்! நான் பார்த்தது வெறும் மனப்பிரமையோ, பயத்தின் விளைவோ அல்லவென்று தெரிந்ததும், என் மனம் ஒரு நிம்மதியடைந்தது.

(தொடரும்)

★

புதுமைக் கருத்துக்கள் இல்லாமல், கருத்துக்களை வெளியிடும் உரிமையில்லாமல், வெளியிடப்படும் கருத்துக்களைக் கேட்கும் விருப்பமில்லாமல், ஒரு அரசாங்கம் இருக்குமானால், அது தனது பாதுகாப்புகளையெல்லாம் இழந்ததாக ஆகும்.

எல்லாரிடமிருந்தும் வரும் புதுமைக்கருத்துக்கள், கொள்கைகள், கோட்பாடுகள், மாறுதல்கள் இவைகளைக் கவனித்து ஏற்றுக்கொள்வதே ஒரு அரசாங்கத்தின் சிறப்பு ஆகும்.

ஒவ்வொரு காலமும் முன்னேற்றத்தின் ஒரு கட்டமாகும்.

—வால்ட் விட்மன்.

Regd. No. M 6296

புதிய வெளியீடுகள்

அறிஞர் அண்ணா

● **மாஜி கடவுள்கள்** சாதா: 3 00
அட்டை பைண்டு: 3 80

கடவுள்கள், கடவுள் கொள்கைகள் பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூல். பலநாட்டுக் கடவுளரின் அழகிய படங்கள். 260 பக்கங்கள். அழகிய மூவர்ண அட்டை.

● **பார்வதி பி. ஏ.** 3 00

கல்வியறிவும், இளமையும், சாகசமும் நிறைந்த ஒரு துடிப்புள்ள பெண்ணின் கதை. அழகிய மூவர்ண அட்டை.

க. அன்பழகன் எம். ஏ.

● **வளரும் கிளர்ச்சி** 0 80

டாக்டர் நாயர் காலத்திலிருந்து இன்றுவரை திராவிடர் இயக்கத்தின் சிறந்த வரலாறு.

● **தொண்டா? துவேஷமா?** 0 80

நமது இயக்கத்தின் அடிப்படைக் கருத்தினை எடுத்துக்கூறும் சிறந்த ஆராய்ச்சி நூல்.

இராதாமணாளன்

● **கானல் நீர்** 1 00

சரித்திரச் சம்பவங்கள் நிறைந்த சுவைமிகுந்த கதை. மூவர்ண அட்டை.

கலைஞர் கருணாநிதி

● **அல்லி தர்பார்** 1 00

திருவாரூர் இளவலின் வீர முழக்கம். மூவர்ண அட்டை.

அச்சில்:

கலைஞர் கருணாநிதி எழுதிய **அகிம்சாமூர்த்திகள்**
புத்தபிரான் அருளிய **தம்மபதம்**

பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.